விலை ரூபா: 15.00

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii




பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 12 ஞாயிற்றுக்கிழமை (28.09.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 284

## ★ முகமாலை ஏ-9 பாதையூடாக ★

# கிளிநொச்சியை கைப்பற்ற படைத்தரப்பு திட்டம்!

## யாழ்ப்பாணத்திலும் இயல்புநிலை பாதிக்கும் அபாயம்

(கொழும்பு)

அடுத்துவரும் வாரங்களில் முகமாலை ஏ-9 பாதையூடாக படை நடவடிக்கையை ஆரம்பிக்க படைத்தரப்பு தயாராக இருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களைப் பூண்டோடு அழிக்கும் திட்டமே அரசிடமுண்டு

### சிங்கள வார ஏட்டிற்கு சம்பந்தன் செவ்வி

(கொழும்பு)

அரச படையினர் விமானம் மூலமும் தரையிலிருந்தும் மேற்கொள்ளும் கண்மூடித்தனமான தாக்குதல்கள் காரணமாக வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் எந்த நேரத்தில் உயிருக்கு ஆபத்து ஏற்படுமோ என்ற அச்சத்திலும் சந்தேகத்திலும் வாழ்ந்து வருவதாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் விமானத்தாக்குதல்

### ஒருவர் பலி;7 பேர் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர் இரத்தினபுரம் மக்கள் குடியிருப்புக்கள் மீது வான்படை நடத்திய குண்டுத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். கைக்குழந்தை மற்றும் மூன்று சிறார்கள் உட்பட ஏழுபேர் படுகாயமடைந்துள்ளனர்.

கிளிநொச்சி (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மக்களுக்கு பெற்றுக் கொடுத்த சுதந்திரம் வடக்கு மக்களுக்கும் பெற்றுக் கொடுக்கப்படும்

### பிரித்தானியப் பிரதமரிடம் ஜனாதிபதி எடுத்துரைப்பு


(நியூயோர்க்)

கிழக்கு மாகாண மக்களுக்குப் பெற்றுக் கொடுத்த ஜனநாயக உரிமையை வடக்கிற்கும் பெற்றுக் கொடுப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடபகுதி மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையுமே ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

பிரித்தானியப் பிரதமர் ஹோடன் பிறவுணை அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் சந்தித்தபோதே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

இரண்டு நாடு (12 ஆம் பக்கம் பார்க்க)



ஐ.நா.செயலாளர் பான் கீ மூனை ஜனாதிபதி சந்தித்தபோது...

## கிளிநொச்சியில் இருந்தும் மக்கள் வெளியேறுகின்றனர்

### ஐ.பி.எஸ்.செய்தி நிறுவனம் தகவல்

(கொழும்பு)

வன்னியில் கிளிநொச்சி நகருக்கு அருகில் மோதல்கள் அதிகரித்து வரும் நிலையில் வான் குண்டுத் தாக்குதல்களும் எறிகணை வீச்சுக்களும் சிறிய ஆயுதத் தாக்குதல்களும் கிளிநொச்சி நகரை அண்மித்திருப்பதாகச் சர்வதேச உதவி அமைப்புகளுக்கிடையிலான முகவர் குழுவான ஐ.ஏ.எஸ்.சி. தெரிவித்துள்ளது.

இதன் காரணமாகக் கிளிநொச்சிப் பிரதேச மக்களும் ஏனைய பல பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்து அங்கு தங்கியிருந்தவர்களும் கிளிநொச்சியை விட்டு வெளியேறி வருவதாகவும் அந்த அமைப்பை மேற்கோள் காட்டி ஐ.பி.எஸ். (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள் எல்லோரும் பயங்கரவாதிகள் அல்லர்; பயங்கரவாதிகளில் 98 வீதமானோர் தமிழர்களே

### கோத்தபாய தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர்கள் எல்லாரும் பயங்கரவாதிகள் அல்லர். ஆனால் பெரும்பாலான பயங்கரவாதிகள்தமிழர்களே ஆவர். இலங்கையிலுள்ள பயங்கரவாதிகளில் 98 சதவீதமானவர்கள் தமிழர்கள் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

லண்டன் பி.பி.சிக்கு அளித்துள்ள பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

வன்னி நோக்கிய படை நடவடிக்கையில் எமது படைகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலை வழக்கில் மற்றொரு கைதி விடுதலை மனுத் தாக்கல்

(சென்னை)


இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை வழக்குடன் தொடர்புடையவர் என்ற காரணத்துக்காக ஆயுள் தண்டனை அனுபவித்துவரும் கைதி ஒருவர் தன்னை விடுதலை செய்யுமாறு கோரி இந்திய மேல் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# நல்லூர் பிரதேச செயலகத்தின் கலாசார விழா நிகழ்வுகள் - 27.09.2008


விருந்தினர்கள் சபைக்கு அழைத்து வரப்படுகின்றனர்...


பேரவைக் கீதம் இசைக்கும் மாணவர்கள்...



கோண்டாவில் சி.கல்யாணசுந்தரம் குழுவினரின் மங்கல இசை...


நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமை உரை...



யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினர் உரை...


யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் சிறப்பு விருந்தினர் உரை...


தொழில் அதிபர் ஈ.எஸ்.பி.நாகரட்ணம் கௌரவ விருந்தினர் உரை...


செல்வி ந.தனசொரூபியின் இசை விருந்து...


கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் கவியரங்கு...


பரிசளிப்பு விழாவின் போது...


நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினர்...

## சர்வதேச சிறுவர் தினத்தையொட்டிய நிகழ்வுகள் வடக்கில் 2ஆம் திகதி

(சாவகச்சேரி)

ஒக்டோபர் 1ஆம் திகதி தோறும் கொண்டாப்படும் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு ஒக்டோபர் 2ஆம் திகதி அன்று வட மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளான மாநகர சபை, நகரச்சபை,பிரதேச சபை தோறும் 30 நிமிடமளவிலான நிகழ்வை நடாத் துமாறு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் அவர்க ளால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் பற்றிய விழிப்புணர்வை சமூகத்தின் அனைத்துத் தரப்பினர் மத்தியில் கொண்டு செல்லும் முகமாக ஒக்ரோபர் 2ஆம் திகதி காலை 8.30 மணிக்கு அந்தந்த அலுவலக உழியர்களின் பங்களிப்புடன் மாணவர்கள், பொதுமக்களின் பிரசன்னத்துடன் மேற்படி நிகழ்வை திட்டமிட்டு நடாத்துமாறு அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். (ஓ-29)

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

**வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலை**

இ.ரூபலக்ஸ்மன்-114

**பா/மாரீசன் கூடல் றோ.க.த.க பாடசாலை**

பு.சியாசின் -122 ,யோ.நீதினி-119 ஞா.மரிலாச் மதுரா-114.

**யா/சுன்னாகம்றோ.க.த.க. பாடசாலை**

கு.ஜனித்தா-133 ,பி.அனோஜன்-117

**மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்**

ஜெ.துஷ்யந்தன்-141,கு.மாதுமை-138, பு.யசோதா-128,து.லோகநாதன்-122, சு.கோபிகன்-120,க.சுயன்-119.

**தென்புலோலி புற்றளை மகா வித்தியாலயம்**

பொ.துஜிதா-137,பூ.பிரசாந்த்-137, பி.கஜன்-128, சி.துவாரகன்-130, சு. ஆதீஷன்-120,கா.தினேஸ்-115,யோ. பிருந்தன்-114.

**பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்**

த.தயாரூபன்-143, த.தயாநிதி-138,கோ.சுகந்தினி-136,சு.தெய்வேந்திரன்-137,ஜெ.ஜோய்சன்-133,அ.மிதுசன்-131, சி.நிரூஜா-130, சு.அபிராமி-123, ஆ.கவினாஸ்-123,தோ-அஜித்தாஸ்-121, செ.கஸ்தூரி-120,க.ஜென்சனா-118,கோ. நிலூசனா-118,கி.தனுஷன்-115,இ.கிருஸ்ணலோஜன்-114.

**வீரசிங்கம் மகா வித்தியாலயம்**

த.பாசுபதன்- 176 (தேசிய மட்டம் 1ஆம் இடம் தமிழ்மொழி மூலம்)

வி.மதனிகா-143,த.மதுசா-143,ச.கேனுஜா-134,பா.தர்சிகா-133,த. சுபவர்ணா-125, தே.தாரகன்-122,சி.யகானா-122,ஜெ. ஜெயபவா-121, கௌ.சிந்துஜா-120, மா. டிசோதன்-115. ஓ

## பொன்விழா

(அல்வாய்)

புலோலி திரு நாவலூர், நாவலர் சன சமூக நிலைய பொன் விழாவும் நூல் நிலையக் கட்டடத் திறப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9மணிக்கு நிலையத் தலைவர் தி.சிவச்செல்வன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ-19)


உள்நாட்டு வெளிநாடுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை

FedEx Express
(யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்)

வாடிக்கையாளரின் நலன்கருதி
லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும்.
கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kgபொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.

உள்நாடு,வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள்,உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION
MMBL Money Master
Money Master

திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

கடை வாடகைக்கு
இல.185, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள கடை வாடகைக்கு உண்டு.
(1786) தொடர்புக்கு -021 222 6923
021 222 9941
021 226 3537

SPOKEN ENGLISH
SPOKEN SINHALA
ஓய்வுபெற்ற ஒருவரினால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புக்கு:-
021 4591001
077 4041904
(1768)

காணி விற்பனைக்கு
மானிப்பாய் வேலக்கை பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:-021 4591438
077 6916929

## நிதி ஒதுக்கீடு

2008 ஆம் ஆண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து அல்வாய் திக்கம் மத்திய சனசமூக நிலையத்திற்கு யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஐம்பதாயிரம் ரூபா, எம். கே.சிவாஜிலிங்கம் ஐம்பதாயிரம் ரூபாவை தளபாடக் கொள்வனவுக்கும் என்.ஸ்ரீகாந்தா புத்தகக் கொள்வனவு செய்ய ஐம்பதாயிரம் ரூபாவையும் ஒதுக்கீடு செய்துள்ளனர். (ஓ-134)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.20 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-134)

## தூய செபமாலை அன்னை திருவிழா

(ஊர்காவற்றுறை)

யாழ்.கொழும்புத்துறை வீதி [illegible] மாலை அன்னையின் வருடாந்த திருவிழா ஆயத்த வழிபாடுகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனி. ஆசீர் ஆகியவற்றுடன் திருவிழா நிறைவுபெறுகிறது. (ஓ-72)

## மருத்துவ முகாம்

சிவத்தமிழ் மானிட விடியற் கழகத்தின் மானிடன் சுகவாழ்வு மையத்தினால் சாந்திகத்தின் அனுசரணையுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் கலைமகள் வித்தியாலயத்தில் சுன்னாகம் கண்ணகி-சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கு இலவச மருத்துமுகாம் நடைபெறவுள்ளதாக கழகத் தலைவர் அறிவித்துள்ளார். ஓ

# விலங்கு விசர்நோய் தொடர்பான — நலத்துறைச் செய்திகள் —

## இன்று விலங்கு விசர்நோய் தினம்


♦ இந் நோய் விசர்நாய்க்கடி நோய், நீர்வெறுப்பு நோய் என வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது.

♦ நோய் ஏற்பட்டால் மரணம் நிச்சயம் என்பதுடன் தடுப்பு மருந்தேற்றப்படுவதன் மூலம் நோய் ஏற்படாது பாதுகாத்துக்கொள்ளவும் முடியும்.


♦ பெரும்பாலும் காட்டு விலங்குகளில் காணப்படும் இந்நோய் வளர்ப்புப் பிராணிகளுக்குக் கடத்தப்பட்டு அதன் மூலமாக மனிதருக்கு நோய்த் தொற்று ஏற்படுத்தப் படுகிறது.

♦ பெரும்பாலும் நாய்கள் மூலமாகவும் அரிதாக வேறு வளர்ப்புப் பிராணிகளாலும் மனிதருக்கு நோய்த் தொற்று ஏற்படுத்தப் படுகிறது. ஓ

### இறப்புகள் பற்றிய விபரம்




யாழ்ப்பாணம்




இலங்கை

## யாழ்.வலய பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில சொல்வதெழுதல் போட்டி

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களின் ஆங்கில சொற்களின் எழுத்துக் கூட்டுதல் திறனை அதிகரிக்கச் செய்யும் நோக்கோடு பாடசாலை மாணவர்கள் மத்தியில் "ஆங்கில சொல்வதெழுதல்" போட்டி ஒன்றினை பலாலி ஆசிரியர் கலாசாலையின் ஆங்கில மன்றம், யாழ்.மாவட்ட றோட்டரிக்கழகத்துடனும் யாழ்.மைய றோட்டரிக்கழகத்துடனும் இணைந்து நடத்துவதற்குதிட்டமிட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக யாழ்.வலயத்தின் கீழ் இயங்கும் யாழ்.கோட்ட பாடசாலைகளுக்கு இடையே இப் போட்டியினை நடாத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

பாடசாலை மட்டத்தில் தெரிவான மாணவர்களுக்கு கோட்மட்ட, வலய மட்ட தெரிவுத் திகதிகள் முறையே ஒக்டோபர் 4ஆம், ஒக்டோபர் 11ஆம் திகதிகளாக திட்டமிடப்பட்டுள்ளன.

பரிசில் வழங்கும் விழா ஒக்டோபர் 18ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப் போட்டியானது இரண்டு பிரிவுக்ளை கொண்டிருக்கும். முதலாம் பிரிவில் 6, 7, 8. வகுப்பு மாணவர்களும் இரண்டாம் பிரிவில் 9,10,11வகுப்பு மாணவர்களும் பங்குபற்றுவர்.

ஒவ்வொரு பிரிவிலும் வலய மட்டத்தில் முதலிடத்தைப் பெறும் ம ாணவர் ஒருவருக்கு தலா ரூபா 10 ஆயிரம் பணப்பரிசும், மேலும் ஒவ்வொரு பிரிவிலும் வலய மட்டத்தில் முதல் 10 மாணவர்களுக்கு பரிசில்களும், வலய மட்டத்தில் பங்குபற்றுகின்ற அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இப் போட்டியினை நடாத்துவதற்கு உரிய அனுமதியினை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வழங்கியுள்ளதாக பலாலி ஆசிரியர் கலாசாலை ஆங்கில மன்றம் அறிவித்துள்ளது. ஓ

## சென்ற் அன்ரனீஸ் கல்லூரியில் வீரர்கள் பாராட்டு விழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சென்ற் அன்ரனீஸ் கல்லூரி தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டியில் வென்று சம்பியனானது தொடர்பாக பாராட்டு வைபவம் நாளை திங்கட்கிழமை முற்பகல்9.30மணியளவில்நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற விக்கார் ஜெனரல் அதிவண. கலாநிதி ஜஸ்ரின் பி.ஞானப்பிரகாசம் கலந்துகொள்ளவுள்ளார். ஓ

## ஊர்காவற்றுறை பிரதேசத்தில் பனை விதை நடுகை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் இருபத்தையாயிரம் பனை விதைகள் நடுவதற்கு ஊர்காவற்றுறை பனைதென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பனை விதைகள் நடுவதற்கான பொருத்தமான இடங்களைத் தெரிவுசெய்து தருமாறு ஊர்காவற்றுறை உதவிஅரசாங்க அதிபரிடம் கேட்கப்பட்டுள்ளது. (ஓ-134)

## நவராத்திரி விழா

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை மறுநாள் செவ்வாய் தொடக்கம் ஒக்டோபர் 9அம்திகதி வியாழக் கிழமை வரை நவராத்திரி விழா தினசரி மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. விழாவில் தினமும் வேதபாராயணம், காயத்திரி மந்திரஜெபம், பஜனை, ஸ்ரீலலிதா அஷ்டோத்திரம் முதலியன இடம்பெறும், விஜயதசமி அன்று வித்தியாரம்பமும் நடைபெறவுள்ளது. ஓ

## சாவகச்சேரி இந்துவின் பரிசில் நாள்

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பரிசில் நாள் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு அருணாசலம் மண்டபத்தில் கல்லூரி முதல்வர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்ட பேராசிரியர் செல்வி வசந்தி அரசரத்தினம், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், கௌரவ விருந்தினராக தென்மராட்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சத்தியநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-29)

## வாரம் ஒரு தகவல்

### காத்திருக்கும் காரிகை!

"ஏன் அண்ணே! பெண்கள் வேலைக்குப் போறதைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க?"

"அவசியம் போகவேண்டும் என்று நினைக்கிறேன்"

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"அப்பத்தான் ஆம்பிளைகளெல்லாம் என்னைப் போலவே "பார்க்"க்கு வந்து பெஞ்சில் உட்கார்ந்து நன்றாக காற்று வாங்கலாம்".

"இப்படிச் சொல்ல உங்களுக்கு வெட்கமாக இல்லையா?"

"ஆரம்பத்தில் இருந்தது! இப்ப இல்லை!"

"நீங்களும் வேலைக்குப் போங்கண்ணே! அதுதான் நமக்குக் கௌரவம்!"

"என்ன பண்றது? இரண்டு பேரும் தான் முயற்சி பண்ணினோம். அவளுக்குக் கிடைத்தது. எனக்குக் கிடைக்கவில்லை!"

"பெரு நாட்டில் ஒரு சட்டம் உண்டாம்!"

"எப்படி?"

"எந்தப் பெண்ணும் வெளியே போய் வேலை பார்க்க வேண்டுமானால் கணவனிடம் ஒப்புதல் வாங்க வேண்டுமாம். No objection Certificate! அது இல்லையென்றால் வேலை கிடைக்காதாம்!"

"விசித்திரமான சட்டம் போல இருக்கே?"

"ஆமாம்! கணவனின் சம்மதம் கிடைக்கவில்லை என்றால் அந்தப் பெண் கோர்ட்டுக்குப் போகலாம். குடும்பத்தைக் காப்பாற்ற வேலைக்குப் போக வேண்டியது அவசியம் என்று நிரூபித்து நீதிமன்ற உத்தரவு வாங்கவேண்டும்! அதற்குப் பின் தான் வேலை கிடைக்கும்!"

"அந்த விஷயத்தில் நம்ம ஊர் எவ்வளவோ மேல்! சரி... நான் புறப்படுகிறேன்"

"எங்கே?"

"வீட்டுக்குத்தான். நான் போற வரைக்கும் என் மனைவி சாப்பிடாமல் காத்துக் கொண்டிருப்பாள்!"

"அப்படியா? ஆச்சரியமாக இருக்கே?"

"சாப்பிட வேண்டும் என்று நினைத்தாலும் அது அவளால் முடியாது!"

"ஏன்?"

"நான் போய்த்தானே சமைக்கவேண்டும்!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

28.09.2008
(புரட்டாதி 12, ஞாயிற்றுக்கிழமை)
பூரம் முற்பகல் 9.31 மணிவரை
சதுர்த்தசி பிற்பகல் 2.06 மணிவரை
இராகுகாலம்-04.32-06.02 மணிவரை
சுபநேரம்-09.02-10.32மணிவரை
சஸ்திரஹதமஹாளயம்

| | |
|---|---|
| மேடம் | தேகஆரோக்கியம், எடுத்த கருமங்கள் கைகூடும், மன மகிழ்ச்சி, புதிய திருப்பம். |
| இடபம் | முயற்சி தாமதம், குடும்பக் கவலை, வேலைச்சுமை, ஆரோக்கியக் குறைவு. |
| மிதுனம் | உடல்சோர்வு, தொழில் ஆர்வம், வாகனசுகம், உறவினர் சந்திப்பு. |
| கடகம் | பிரயாணநன்மை, நினைத்த காரியம் கைகூடும், தனலாபம், வ ாக்குமேன்மை. |
| சிங்கம் | கற்பனை மிகுதி, விவாதம், காரியதாமதம், அதிகசெலவு. |
| கன்னி | நண்பர்கள்சந்திப்பு, விருந்துபசாரம், நல்லமுயற்சி, போசன சுகம். |
| துலாம் | உறவினர் மனஸ்தாபம், எதிர்பாராத நன்மை, சயனசுகக் குறைவு, சுபசெலவு. |
| விருச்சிகம் | எடுத்த காரியம் கைகூடும், உறவினர் உதவி, போசனசுகம், பணவருவாய். |
| தனுசு | புதிய விடயம், தொழில் மேன்மை, நண்பர்கள் உதவி, காரிய அனுகூலம். |
| மகரம் | அதிகபிரயாசை, எதிர்பாராத செலவு, பிரயாணம், முயற்சி தாமதம். |
| கும்பம் | புனல்வியாதி, வீண்பிரச்சினை, வாகன பயம், வேலைச் சுமை. |
| மீனம் | திடீர் பயணம், செல்வாக்கு, பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி. |

வளவன்

## நல்லூர் பிரதேச செயலகத்தின் கலை இலக்கியப் பெருவிழா

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடாத்தும் கலை இலக்கியப் பெருவிழாவின் இரண்டாவது அமர்வு "விமலா யோகநாதன் அரங்கு" இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணி தொடக்கம் 12மணி வரை நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் நல்லூர் உதவிப் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண ஓய்வுபெற்ற மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம், சிறப்பு விருந்தினராக இராமநாதன் நுண்கலைப்பீட இசைத் துறைத் தலைவர் செல்வி பாக்கிய லட்சுமி நடராஜா, கௌரவ விருந்தினராக செல்வி புஷ்பா செல்வநாயகம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் மங்கல விளக்கேற்றல், தமிழ்தாய் வாழ்த்து, பேரவைக்கீதம், மங்கள இசை ஆகியவற்றைத் தொடர்ந்து திருமதி சுந்தரேஸ்வரி ஜெயக்குமாரின் மாணவிகள் வழங்கும் வாத்திய பிருந்தாவும் "நாளைய தலை முறையை ஒளிமயமாக்க அத்தியா வசியமானது" அறிவியல் கல்வியே! ஒழுக்கக் கல்வியே! என்னும் தலைப்பில் இடம்பெறும் பட்டிமன்றத்தின் நடுவராக ந.விஜயசுந்தரம் நடுநிலை வகிக்கவுள்ளார். தொடர்ந்து யா/இந்துமகளிர் கல்லூரி மாணவிகளின் நடனம், கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்களின் ஒயிலாட்டம் என்பன இடம் பெறும்.

மூன்றாவது அமர்வு இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 1.30 மணி தொடக்கம் 5.30 மணிவரையும் இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்ப்பாண மாவட்டஅரசாங்க அதிபர் கே.கணேஷ், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, கௌரவ விருந்தினராக பிரதேசசபை செயலாளர் எம்.ஜே.சாந்தசீலன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் விருந்தினர்களை வரவேற்று அழைத்துவரல், மங்கல விளக்கேற்றல், மங்கள இசை, வரவேற்புரை என்பனவற்றைத் தொடர்ந்து செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் "இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழர் பண்பாடு" எனும் பொருளில் சிறப்புரை வழங்குவார்.

தொடர்ந்து கொக்குவில் கலா பவனம் வழங்கும் "நிருத்திய வந்தனம்" நாட்டிய நிகழ்ச்சி இடம்பெறும்.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை இணைப்பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா கலைஞர் கௌரவிப்பு நூல் அறிமுகம் செய்யவுள்ளார். அடுத்து கலைஞர் கௌரவிப்பில் சமுர்த்தி முகாமையாளர் தி.சந்திரகாசன் கலைஞர் அறிமுக உரை வழங்குவார். இறுதியாக செயற்திறன் அரங்க இயக்கம் அளிக்கும் "சொர்க்கத்தின் குழந்தைகள்" எனும் நாடகம் இடம் பெறும். ஓ

# சினித்துளிகள்

## தீ படம் ரிலீசுக்கு தயார்



நண்பனின் காதலி தங்கம் படங்களைத் தொடர்ந்து ஸ்ரீமூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் படம் தீ. இந்தப் படத்தில் நடிகர் சுந்தர் சி. என்கவுண்டர் ஸ்பெஷலிஸ்டாக நடிக்கிறார்.

அவருக்கு ஜோடியாக நடிகைகள் நமீதா, ராகிணி ஆகியோர் நடிக்கிறார்கள். மற்றும் நடிகர் விவேக், ஜி.எம். குமார், விச்சு, மனோஜ் கே.ஜெயன், கவுதம், தலைவாசல் விஜய்,சாயாஜி ஷிண்டே உள்ளிட்டோரும் இப்படத்தில் நடிக்கிறார்கள் .

இந்தப் படத்தின் சூட்டிங் நிறைவடைந்த நிலையில் ரீலிசுக்கு தயாராகி விட்டது.

## 16 வயது தோற்றத்துக்காக பட்டினி கிடந்த சூர்யா



நடிகர் சூர்யா நடித்துள்ள ''வாரணம் ஆயிரம்'' படத்தின் ஓடியோ வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது. இதில் படத்தின் டைரக்டர் கவுதம். நடிகர் சூர்யா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

விழாவில் கலந்துகொண்டு பேசிய நடிகர் சிவகுமார், நான் எம்.ஜி.ஆர். சிவாஜியுடன் நடித்தவன். பெரிய மேதைகளான அவர்கள் எல்லாம் செய்யாத காரியத்தை இந்தப் படத்தின் மூலம் சூர்யா செய்திருக்கிறார் என்பதை நினைக்கும்போது பெருமையாக இருக்கிறது.

படத்தில் 16 வயது முதல் 60 வயது வரையிலான தோற்றங்களில் சூர்யா நடித்திருக்கிறார். 16 வயது தோற்றத்துக்காக பல மாதங்கள் பட்டினி கிடந்திருக்கிறார் என்றார்.

## பிரகாஷ்ராஜ் ஜோடியாக காதல் சந்தியா



நடிகர் பிரகாஷ்ராஜின் ஜோடியாக நடிகை சந்தியா நடிக்கவுள்ளார். வித்தியாசமான படங்களை எடுத்து வரும் டைரக்டர் தங்கர் பச்சான் தனது அடுத்த படத்துக்கு தயாராகி விட்டார்.


இப் புதிய படத்தின் நாயகனாக நடிக்கவிருப்பவர் நடிகரும், இயக்குநருமான பிரபுதேவாவாம். அவரைத் தவிர முக்கியமான கேரக்டரில் நடிகர் பிரகாஷ்ராஜ் நடிக்கிறார். பிரகாஷ்ராஜிற்கு ஜோடியாக நடிக்க நடிகை காதல் சந்தியாவிடம் கேட்டுள்ளனர். பிரபுதேவாவுக்கு ஜோடியாக நடிக்கும் நடிகை இன்னமும் முடிவாகவில்லையாம். இப் புதிய படத்துக்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சுப்பிரமணியபுரம் ஜெய் நடிக்கும் அர்ஜுனன் காதலி

சிவசக்தி பாண்டியனின் எஸ்.எஸ்.மூவி மேக்கர்ஸ் சார்பில் தற்போது "சூரியன் சட்டக் கல்லூரி" என்ற படம் எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தப் படத்தை தொடர்ந்து சிவசக்தி பாண்டியன் தயாரிக்கும் படம் "அர்ஜுனன் காதலி" இப்படத்தின் நாயகனாக சுப்பிரமணியபுரம் ஜெய் நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக நடிக்க புதுமுக நடிகையை தேடி வருகிறார்கள். தமிழகத்தின் தென் மாவட்டங்களைப் பிரதிபலிக்கும் வகையில் எடுக்கப்படும் இந்த படத்தின் சூட்டிங்கை மதுரை, திருப்பரங்குன்றம்,குற்றாலம், தென்காசி உள்ளிட்ட பகுதிகளில் நடத்த திட்டமிட்டுள்ளனர்.

## ரீமேக் ஆகிறது முரட்டுக்காளை



நடிகர் ரஜனிகாந்த் நடித்த முரட்டுக்காளை படத்தின் ரீமேக்கில் யாராவது நடிக்க அழைத்தால் சம்பளத்தைக் கூட குறைத்துக்கொள்கிறேன் என்று நடிகர் சுந்தர் சி ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இதையடுத்து கலைஞர் டிவியில் முக்கிய பொறுப்பு வகிக்கும் குணாநிதி என்பவர் முரட்டுக்காளை படத்தை ரீமேக் செய்ய முன்வந்துள்ளார். இதற்காக ஏவி.எம். நிறுவனதிடம் பேசி, முரட்டுக்காளை ரீமேக் உரிமையை பெற்றுள்ள இவர், படத்தில் நடிக்க சுந்தர்சிக்கு அழைப்பு விடுத்துள்ளார். உற்சாகமாக ஓ.கே. சொல்லியிருக்கும் சுந்தர் சி ரஜனிகாந்த் நடித்த கேரக்டரில் நடிப்பது பெருமையான விடயம் என்றும், இந்தப் படம் எனக்கு நல்ல பெயரை வாங்கிக் கொடுக்கும் என்றும் கூறியிருக்கிறார். சுந்தர் சிக்கு எம்.ஜி.ஆர். நடித்த "உலகம் சுற்றும் வாலிபன்" படத்தை தனது பேனரில் ரீமேக் செய்யவேண்டும் என்ற ஆசையும் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# சினி விமர்சனம்



## ராமன் தேடிய சீதை

திருமண அழைப்பிதழ்களை விற்கும் ஒருவருக்கு திருமணமே கனவாக இருந்தால் எப்படியிருக்கும்? இந்தக் கேள்விக்கான பதிலை சுவாரஸ்யமாக சொல்லியிருக்கும் படம்தான் ராமன் தேடிய சீதை. படிப்பில் மாநிலத்திலேயே இரண்டாவது மாணவராக வரும் சேரனுக்கு மேற்கொண்டு படிப்பை தொடர முடியாதபடி மனநோய். அதற்காக சிகிச்சைமேற்கொள்கிறார். சிகிச்சை முடிந்த பின்னர் சொந்தமாக தொழில் தொடங்குகிறார். கஷ்டப்பட்டு உழைக்கும் உழைப்புக்கு பலன் கிடைக்காமலா போய்விடும்.

**இயல்பான கதை**

சமுதாயத்தில் ஓரளவு நல்ல நிலைக்கு வரும் சேரனுக்கு திருமணம் செய்துவைக்க முடிவு செய்கிறார்கள். பெண்பார்க்கும் படலம் தொடங்குகிறது. பெண் பார்க்கப் போகும் இடங்களில் எல்லாம் தனது சிறுவயது மனநோயை மறைக்காமல் சொல்லும் சேரனை மணக்க எந்தப் பெண்ணும் முன்வர மறுக்கிறார்கள். மனம் வெறுத்துப் போயிருக்கும் சேரனை மணக்க ஒரேயொரு பெண் சம்மதிக்கிறார். திருமண ஏற்பாடுகள் தடபுடலாக நடக்கிறது. தாலிகட்டும் நேரத்தில் அந்தப் பெண்ணும் எஸ்கேப் ஆகிறார். ஆனால் சேரனோ பழியைத் தன் மீது போட்டுக்கொண்டு, இதெல்லாம் எனக்கு பழகிப் போச்சு என்கிறார். அதேநேரத்தில் ஓடிப்போன பெண்ணின் தந்தை மணிவண்ணன், சேரனை தனது சொந்த மகன் போல நினைத்து , உன் திருமணத்துக்கு நான் பொறுப்பு என்று சொல்லி பெண் பார்க்கத் தொடங்குகிறார். மணிவண்ணனும், சேரனும் சேர்ந்து பெண் பார்க்க செல்வதும், பெண் பார்க்கப் போகும் இடத்தில் நடக்கும் கூத்துக்களும் தான் படத்தின் மீதிக் கதை.

சேரன் தனது உருக்கமான நடிப்பில் பெண்களின் மனதில் நிரந்தர இடத்தைப் பிடித்து விடுவார் போலிருக்கிறது. உணர்ச்சி வசப்படும் காட்சிகளில் வார்த்தைகள் தந்தியடிக்க திக்கித் திக்கி பேசுவது புதுமை. தன்னை ஊதாசீனப்படுத்தும் பெண்களிடம் அன்பு காட்டுவது அருமை. பெண் பார்க்கப் போகும் இடங்களில் எல்லாம் தனது குறையைச் சொல்வது மட்டும் கொஞ்சம் ஓவராக தெரிகிறது. பார்வையற்றவராக பசுபதி நடித்திருக்கிறார்.பசுபதியின் நடிப்பை சொல்லவா வேண்டும். மனிதர் வாயில் இருந்து உதிரும் தன்னம்பிக்கை வார்த்தைகள் கண் கலங்க வைக்கின்றன.

பார்வையில்லாத போதிலும் சண்டை போடும் காட்சியில் யதார்த்தமான நடிப்பு. பல காட்சிகளில் பசுபதியின் நடிப்பை பார்க்கும்போது உண்மையான பார்வையற்றவர் கூட தோற்றுப் போய் விடுவார் என்று சொல்லலாம். அந்த அளவுக்கு யதார்த்தமாக பார்வையற்றவராகவே வாழ்ந்து காட்டியிருக்கிறார். நிதின் சத்யாவும் தன் பங்குக்கு படத்தை கலகலப் பூட்டியிருக்கிறார். அவரது திருட்டுக்காதல் ரசிக்க வைக்கிறது.

காதலி கார்த்திகா சொன்னதற்காக மரதன் ஓட்டத்தில் கலந்துகொண்டு பாராட்டுக்களை வாங்கும் காட்சியில் காதல் ஜெயித்திருக்கிறது. ரம்யா நம்பீசன், விமலாராமன்,கஜாலா,கார்த்திகா,நவ்யா நாயர் என 5 நாயகிகளும் தங்கள் கேரக்டர்களை உணர்ந்து நடித்திருக்கிறார்கள். காட்சிக்கு காட்சி ரசித்து சிரிக்கும் வகையில் படத்தை செதுக்கியிருக்கிறார் ரைடக்டர் ஜெகன்நாத் என்ன புள்ள செஞ்சநீ பாடல் காதுகளுக்கு இதம்.

## ரஜனியை முந்திய விஜய்!



சென்னை லயோலா கல்லூரி எடுத்துள்ள கருத்துக் கணிப்பில் மக்கள் மனம் கவர்ந்த நடிகர்கள் வரிசையில் எம்.ஜி.ஆரும் ,சிவாஜி கணேசனும் முதல் இரு இடங்களில் உள்ளனர். தற்போதைய நடிகர்களில் சூப்பர் ஸ்டார் ரஜனியை முந்தி முதலிடத்தை எட்டியுள்ளார் விஜய்.

லயோலா கருத்துக் கணிப்பில் மக்கள் மனம் கவர்ந்த நடிகராக மறைந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் இருக்கிறார். அவருக்கு 21.3 சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர். எம்.ஜி.ஆர். நடித்த படங்களிலேயே தங்களைக் கவர்ந்த படம் "நாடோடி மன்னன்" என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

2ஆம் இடத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இருக்கிறார்.அவருக்கு 18.9 சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர். சிவாஜி படங்களிலேயே சூப்பர் படம் என அவர்கள் பாராட்டியுள்ளது "பாசமலர்".

நடிகர் விஜய் 3ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். அவருக்குக் கிடைத்துள்ள ஆதரவு 16.4சதவீதம் ஆகும். அவரது படங்களிலேயே "கில்லிதான்" மக்களுக்கு அதிகம் பிடித்துள்ளதாம்.

சூப்பர் ஸ்டார் ரஜனிகாந்தை முதல் முறையாக முந்தியுள்ளார் விஜய் என்பது குறிப்பிடத்தக்கது.

4ஆவது இடத்தில் இருக்கும் ரஜனிக்கு 16.2 சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.




சூப்பர் ஸ்டார் படங்களிலேயே "பாட்ஷா" தான் மக்களுக்குப் பிடித்துள்ளதாம்.

5ஆம் இடத்தைப் பிடித்திருப்பவர் விஜயகாந்த். கேப்டனுக்கு கிடைத்துள்ள ஆதரவு 10.7 சதவீதம் ஆகும். "கேப்டன் பிரபாகரன்" தான் விஜயகாந்த் படங்களிலேயே சிறப்பானது என்பது மக்களின் தீர்ப்பு.

## எந்திரன்: ரஜனி–ஐஸ் ஸ்டில்கள் லீக்!



ரஜனி–ஐஸ்வர்யா ராய் நடிக்கும் எந்திரன் தி ரோபோ திரைப்படத்தின் ஷூட்டிங் ஸ்பொட் ஸ்டில்கள் லீக் ஆகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.சூப்பர் ஸ்டார் ரஜனியும் ஐஸ்வர்யாராய் பச்சனும் பெருநாட்டின் சரித்திரப் பிரசித்தி பெற்ற மாச்சு பிக்குவில் டூயட் பாடுவதுபோல காட்சிகள். படப்பிடிப்புக்குழுவினருடன் இருக்கும் காட்சிகள் இதில் இடம்பெற்றுள்ளன.

மொத்தம் 5ஸ்டில்கள் வெளியாகியுள்ளன. இவை ஐந்துமே அதிகாரபூர்வமானவை அல்ல. ஆனால் வழக்கமான போட்டோஷாப் தந்திரம் எதுவும் இப் படங்களில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப்படம் குறித்து அதிகாரபூர்வமாக ஒரேயொரு ஸ்டில் மட்டுமே, போஸ்டர் டிசைன் வெளியிடப்பட்டிருந்தது.இதில் கிராபிக்ஸ் செய்யப்பட்ட ரஜனி படம் இடம்பெற்றிருந்தது. வேறு எந்தத் தகவல்களும்,புகைப்படங்களும் மீடியாவுக்கு தரப்படவில்லை. இத்தனைக்கும் 4 போட்டோ செஷன்களை ரஜினி–ஐஸ்வர்யாராயை வைத்து எடுத்திருந்தார் இயக்குநர் ஷங்கர்.

படத்தின் எந்த ஸ்டில்களும் வெளியில் தெரியவே கூடாது என்பதில் மிகக் கண்டிப்பாக இருந்தார் ஷங்கர். இதற்காகவே செட்டில் யாரும் செல்போன் உபயோகிப்பதைக் கூட தடைசெய்திருந்தார்.

ஆனால் இவற்றையெல்லாம் மீறி, எந்திரன்–தி ரோபோ ஸ்டில்களை பெருநாட்டைச் சேர்ந்த ஒரு இணைய்த்தளம் வெளியிட்டுள்ளது. ரஜனியின் சிவாஜி படத்துக்கும் இதேபோலத்தான் கெடுபிடிகள் விதிக்கப்பட்டன. ஆனால் படத்தின் முக்கிய ஸ்டில்கள் , பாடல்கள் போன்றவை முதலில் இணையத்தளங்களில் வெளியான பிறகுதான் அதிகாரபூர்வமாக வெளியாகின என்பது குறிப்பிடத்தக்கது.

# நோத்முதல் கோபல்லவா வரை (111)



மீள் பார்வை

## மனிங் காலத்து முதற்றிருத்தம்

தேசிய மகாசபையினர் இத்தருணத்தில் சும்மாவிருக்கவில்லை. அவர்கள் தாங்கள் முன்னர் தயாரித்த அரசியல் நினைவேட்டை நடைமுறையில் கொண்டு வருவதற்குக் கிளர்ச்சி செய்தனர். ஆள்பதி மனிங் அவர்களின் திருத்தம், 1. ஆள்பதியின் அதிகாரத்தை அதிகரித்தது 2. சட்டசபையில் பிரதிநிதிகள் சுதந்திரமாகப் பேசுவதை தடை செய்தது. 3. பொதுமக்களின் பிரதிநிதிகள் மீது கௌரமற்ற தடை நிபந்தனைகளைச் சுமத்தியது.4. இலங்கைவாழ் மக்களிடையே சாதிப்பிரிவை ஏற்படுத்தியது.5. சுயாட்சியின் ஆரம்ப அனுகூலத்தையாவது அளிக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டினர்.

மனிங் அவர்கள் செய்த மகத்தான திருத்தத்திலே கண்டிச் சிங்களவருக்குத் தெரிவு முறையில் பிரதிநிதித்துவங் கிடைக்கவில்லை. அதேபோல முஸ்லிம் மக்களுக்கும் தெரிவுமுறை அளிக்கப்படவில்லை. இவைகளினால் பலரும் விரும்பாத இத் திருத்தம் பயனளிக்கமாட்டாது.எனவே அரசியற்றிருத்தங்கோரியவர்கள் கருதினார்கள். இத்தகைய சீர்கேடான திருத்தத்தைத் தன் மானமுள்ள இலங்கையர் எவரும் ஏற்றுக் கொள்ளமாட்டார் என்பது வெளிப்படையாயிற்று.

எனவே தேசிய மகாசபையினர் உடனடியாக ஒரு விசேட பொதுக்கூட்டத்தைக் கூட்டினர். அதன் ஒப்பற்ற தலைவராய அருணாசலம் அவர்கள் ஆள்பதியை வன்மையாகக் கண்டித்தார். அவர் கண்டனங்கள் அரசியற் பண்டிதர்மாருள் பெரிய பரபரப்பை உண்டாக்கின.

முன்னர் ஆள்பதியின் பணிக்குழுவாட்சியில் அவருடைய நிர்வாக சபையை அலங்கரித்த அருணாசலம் அவர்களா இங்ஙனம் பொதுமக்களுக்காகப் பேசுகிறார் எனப் பெரியவர்கள் மூக்கின் மேல் விரலை வைத்துப் பெருமூச்சு விட்டார்கள். "ஆள்பதி அவர்கள் இரக்கம் இல்லாத மனிதன். அவருக்கு மாற்றங்கள், முற்போக்குகள் என்றால் என்னவென்றே தெரியாது. இலங்கைப் பொதுமக்கள் மீது அவருக்கு அனுதாபம் இல்லை. பிரித்தானிய அரச உத்தியோகத்தர் இந்திய மக்கள் மீது இரக்கங் காட்டுவதாகத் தெரியவில்லை என மன்னர்பிரான் வெளி வெளியாகக் கூறிய வாசங்கூட எங்கள் ஆள்பதியின் கவனத்தில் எட்டவில்லை. பிற்போக்காளரும் கூழுக்குப் பாடிகளும் அவருக்கு முகமன் கூறி அவரைச் சிந்திக்க விடுகிறார்கள் இல்லை"

"இத்திருத்தம் தேவைகளைத் திருப்திப்படுத்தாது, குறைகள் நிரம்பியது, பிற்போக்கானது, வெறுக்கத்தக்கது. சட்ட சபையைக் கட்டுப்படுத்துவது, ஆளபதியின் அதிகாரத்தை அதிகப்படுத்துவது, பேச்சுச் சுதந்திரத்தை அகற்றுவது, நிர்வாகத்துறையை மட்டுப்படுத்துவது, சனங்களின் கௌரவ பிரதிநிதிகளை அவமதிப்பது, வகுப்பு வாதத்தை வளர்ப்பது, மாந்தருக்குள் வேற்றுமையை உண்டாக்குவது, பொறுப்பாட்சிக்கு அத்திபாரந்தானும், இல்லாதது" என்பன அவர்கள் வெறுத்துக் கூறிய வாசகங்களாம்.

வன்மையாகப் பேசிய அருணாசலம் அவர்களின் குரல் மென்மையாய் ஒலித்தது. "நாங்கள் நலிய வேண்டும் என்பது தெய்வ சித்தம் போலும். நாம் எல்லோரும் இவ் வண்ணம் ஒருவருக்கும் உதவாத இந்தத் திருத்தத்தை எதிர்ப்பதில் இலங்கையர் அனைவரையும் ஒன்றுபடுத்திய பெருமை ஆள்பதி மனிங் அவர்களுக்கே உரியதாகும்"

இவ்வாறு தலைவரும் வழிகாட்டியுமான அருணாசலம் அவர்கள் கூறியவற்றைக் கேட்ட சிங்களவர் ஒரே முகமாகத் தேசிய மகாசபையின் சார்பில் மனிங் திருத்தத்தின் அடிப்படையில் ஒத்துழையாமையை மேற்கொண்டார்கள்.


தேசிய மகாசபையினர் ஆள்பதி மனிங் அவர்களின் முதலாவது திருத்தத்தை உபயோகமற்றது என்று பகிரங்கமாகக் கண்டித்தமையைக் கேட்டு மனிங் அவர்கள் அஞ்சவில்லை. அவர் தேசிய மகாசபையினரிடம், "நீங்கள் என்னுடைய திட்டத்தை ஏற்று என்னுடன் மனப்பூர்வமாய் ஒத்துழைத்தால் நான் உங்கள் கோரிக்கைககளை நிறைவேற்றித் தருவேன்" என்று கூறினார். தேசிய மகாசபையினர் அத்திட்டத்தை ஏற்றுக்கொண்டனர். அத்தகைய திட்டத்தை விரும்பாத அருணாசலம் அவர்கள் அதில் கலந்து கொள்வதை விரும்பவில்லை.

அதனால் தேசிய மகாசபையில் நம்பிக்கையில்லாது போன தமிழர்; தேசிய மகாசபையை விட்டு விலகினர். அந்தச் சபையும் தேசிய முறுக்குக் குலைந்து வெறுங் கரைநாட்டுச் சிங்களவர் சபையாய்ப் பரிணமித்தது.

**க.சி.குலரத்தினம்**

தமிழர் விலகியதால் தேசிய மகாசபை கடலில் மூழ்கிப் போகவில்லை. அவர்கள் அதுகாறும் தமிழருக்குச் சார்பாக நின்ற காரியங்களில் தங்கள் எதிர்ப்பையுங் காட்டத் தொடங்கினார்கள். அரசியல் காரியங்கள் அடிதலை மாறின. (தொடரும்)





வடமராட்சி மாலுசந்தி மைக்கேல் விளையாட்டுக் கழகத்தின் 15ஆம் ஆண்டு நிறைவுவிழா இறுதியாட்டத்திலும் பரிசளிப்பு விழாவிலும் விருந்தினர்கள் விளையாட்டு வீரர்களுக்கு அறிமுகம் செய்யப்படுவதையும், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தலைவர் டி.எம். வேதாபரணம் மங்கல விளக்கேற்றுவதையும், சாவகச் சேரி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன் வெற்றியீட்டிய விளையாட்டு வீரர்களுக்குப் பரிசில்களை வழங்குவதையும் படங்களில் காணலாம்.(படங்கள்:-பரு.நிருபர்)

# தொல்லியல் நோக்கில் (17)

# கந்தரோடையும் கதிரமலையும்

**வரலாற்றுத் துறைப் பேராசிரியர்**
**ப. புஷ்பரட்ணம்**

யாழ்ப்பாண வைபவமாலை (சுபாநாதன் 1949:13) கைலாயமாலை (ஜம்புலிங்கப் பிள்ளை 1937:2) என்பவற்றில் வலிகாமத்துடன் தொடர்புபடுத்தும் கதிரமலை, திருக்கோணாசல புராணத்தில் (சண்முகரத்தின ஐயர் 1909:3) மாணிக்ககங்கைக்கு அருகில் உள்ள இடமாகவும், கோணேஸ்வரர் கல்வெட்டில் திருகோணமலையில் இருந்த இடமாகவும், மட்டக்களப்பு மான்மியத்தில் அங்கிருந்த இடமாகவும் குறிப்பிட்டுள்ளன. இந் நிலையில் கதிரமலை எங்கிருந்ததெனத் திட்வட்டமாகக் கூறுவதற்கு உறுதியான சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் தலைநகர் கதிரமலையைப் பலரும் கந்தரோடை எனக் கூறிக் கொள்வதை நோக்கும் போது அதிலும் சில ஐயப்பாடுகள் எழுகின்றன.

உக்கிரசிங்கன் கதையோடு தொடர்புபடுத்தப்படும் கீரிமலை, மாவிட்டபுரம், காங்கேசன் துறை என்பவற்றை உள்ளடக்கிய வட்டாரத்திற்கு மிக அண்மித்த நிலையில் அவன் ஆட்சிபுரிந்த கதிரமலை இருந்தது என்ற பொருளில் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. இக் கூற்றை நோக்கும்போது இவ்விடங்களுக்கும் கந்தரோடைக்கும் இடையிலான தூரம் மிக அதிகமாக உள்ளது. பண்டைய காலத்தில் தமிழகத்திலும், இலங்கையிலும், தமிழர்கள், தமிழ் மன்னர்கள் பௌத்தர்களாக, பௌத்தமதத்தை ஆதரித்தவர்களாக இருந்ததற்குப் பல சான்றுகள் உண்டு. இதனால் கந்தரோடையில் காணப்படும் பௌத்த எச்சங்கள் தமிழரோடு தொடர்புடையதெனக் கருத இடமுண்டு. ஆனால் தமிழகத்தில் ஏற்பட்ட பக்தி இலக்கியத்தின் செல்வாக்கால் அங்கு பௌத்தம் வீழ்ச்சியடைந்து மக்களும், மன்னர்களும் பிராமணிய மதச் செல்வாக்கிற்கு உட்பட்டனர். இதன் தாக்கம் இலங்கையின் ஏனைய பிராந்தியங்களைக் காட்டிலும் வட இலங்கையில் கூடுதலாக ஏற்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. இதை நாயன்மார் பாடல்களும் உறுதிப்படுத்துகின்றன. இதன் தாக்கத்தால் கந்தரோடையில் இருந்த பௌத்த மத வழிபாட்டு மையங்கள் முற்றாக வீழ்ச்சியடைந்ததெனக் கூறமுடியாது. இங்கிருந்த பௌத்த ஆலயங்கள் கி.பி 14ஆம் நூற்றாண்டு வரை சிங்கள மன்னர்களின் ஆதரவைப் பெற்றதற்குப் பாளி, சிங்கள இலக்கியங்களில் மட்டுமன்றி கந்தரோடையில் கிடைத்த கி.பி 10 ஆம் நூற்றாண்டுக்குரிய சிங்களக் கல்வெட்டுக்களும் சான்றாக உள்ளன. கதிரமலையை ஆண்ட உக்கிரசிங்கன் அவன் மனைவி மாருதபுரவல்லி பிராமணிய மதத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவர்கள் என இலங்கையர்கள் கூறுகின்றனர். இங்கே கதிரமலையை கந்தரோடை எனக் கொண்டால் எப்படி பிராமணிய மதத்தைப் பின்பற்றிய உக்கிரசிங்கன் தலைநகரில் பௌத்தமதம் தொடர்ந்தும் நிலைத்திருந்ததெனக் கூறமுடியும்?

உக்கிரசிங்கன்ஆட்சியில் கீரிமலை, மாவிட்டபுரம் போன்ற இடங்களில் இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டதாக இலக்கியங்களில் சொல்லப்படுகிறது. பொதுவாக ஒரு மன்னன் தனதும், தனது ஆளுகைக்குட்பட்ட மக்களினதும் சமய நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் வகையில் அரச தலைநகரங்களிலும், தனது ஆட்சிக்கு உட்பட்ட இடங்களிலும் ஆலயங்களை அமைப்பது பொதுவாக வரலாறாகும். அவ்வாறு உக்கிரசிங்கன் ஆட்சியிலும் அமைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இக்காலத்தில் ஈழத்து இந்து ஆலயங்களைப் போற்றிப் பாடிய நாயன்மார் மாவிட்டபுரத்திலோ அல்லது கீரிமலையிலோ இருந்த ஆலயங்கள் பற்றி ஓர் இடத்தில் தானும் குறிப்பிடவில்லை .மாறாக மாதோட்டத்தில் இருந்த திருக்கேதீஸ்வரத்தையும் ,திருகோணமலையில் இருந்த திருகோணஸ்வரத்தையும் போற்றிப் பாடியுள்ளனர். தலைநகர் கதிரமலை, திருக்கேதீஸ்வரம் ,கோணேஸ்வரம் போல் கடற்கரையை அண்டிய கீரிமலை,மாவிட்டபுரம் என்பவற்றை உள்ளடக்கிய பிராந்தியத்தில் இருந்திருந்தால் அரச தலைநகரும், அங்கிருந்த ஆலயங்களும், நாயன்மார் பாடல்களில் குறிப்பிட வாய்ப்பிருந்திருக்கும்.

வட இலங்கையில் மாதோடத்தைப் போல் வரலாற்றுப் பழைமை வாய்ந்த துறைமுகமாக ஜம்புக்கோள துறைமுகம் பாளி இலக்கியங்களில் கூறப்படுகிறது. இத் துறைமுகத்தைச் சிலர் தற்கால காங்கேசன் துறைமுகம் எனவும், வேறு சிலர் கந்தரோடைக்கு அண்மையில் உள்ள திருவடிநிலை எனவும் கூறுகின்றர். ஆயினும் தேவநம்பிய தீசன் ஆட்சியின் பின்னர் (கி.மு. 3ஆம் நூற்றாண்டு) இத்துறைமுகத்தின் முக்கியத்துவம் பாளி இலக்கியங்களில் படிப்படியாக மறக்கப்பட்டுள்ளது. உக்கிரசிங்கனின் தலைநகர் கதிரமலை எனப்படும் கந்தரோடையாக இருந்திருந்தால் அவன் ஆட்சியில் இத் துறைமுகம் முக்கிய இடம்பெற்றிருக்க வாய்ப்பிருந்திருக்கும். ஆனால் அவன் கால வரலாறு கூறும் இலக்கியங்களில் ஜம்புகோளத் துறைமுகம் பற்றியோ அல்லது தற்காலத்தின் காங்கேசன்துறைமுகத்தின் முக்கியத்துவம் பற்றியோ கூறப்படவில்லை. மேலும் உக்கிரசிங்கன் ஆட்சிசெய்த காலத்தில் தான் தமிழகப் படையெடுப்பாளர் வட இலங்கையில் உள்ளதுறைமுகங்களையும், இங்கிருந்த தமிழ்மக்களையும் பயன்படுத்தி சிங்கள மன்னர்களை வெற்றிகொண்டதாக வரலாற்றிலக்கியங்கள் கூறுகின்றன. இதில் மாதோட்ட துறைமுகத்தை முக்கியத்துவப்படுத்திக் கூறிய வரலாற்றிலக்கியங்கள் ஒரு இடத்தில் தானும் ஜம்புகோளத் துறைமுகம் பற்றிக் கூறவில்லை.

13ஆம் நூற்றாண்டில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த ஆரியச் சக்கரவர்த்திகளின் வரலாற்றைக் கூறும் இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் நல்லூருக்கும் கதிரமலைக்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழரசரின் தலைநகராக இருந்த சிங்கைநகர் பற்றிக் கூறுகின்றன. இங்கே கதிரமலை கந்தரோடையாக இருந்திருந்தால் ஏன் நல்லூருக்கு அண்மையில் இருந்த கந்தரோடையை ஒரு இடத்திலாவது முக்கியப்படுத்திக் கூறவில்லை என்பது புரியவில்லை. உக்கிரசிங்கன் காலத்தில் தமிழரசு ஒன்று வடஇலங்கையில் இருந்ததென்பதற்கு கிடைக்கும் நம்பகரமான சான்று நாணயங்களாகும். இந் நாணயங்கள் பல மாதோட்டத்திலும், பூநகரி வட்டாரத்திலும் கிடைத்துள்ளன. ஆனால் எனக்குத் தெரிந்தவரை கந்தரோடையில் இவ்வகை நாணயம் இதுவரை கிடைத்ததாகத் தெரியவரவில்லை. கதிரமலை கந்தரோடையாக இருந்திருந்தால் ஏனயை நாணயங்களை விட கதிரமலை அரசு கால நாணயங்களே இங்கு அதிகமாகக் கிடைத்திருக்கும். மேற்கூறப்பட்ட காரணங்களை வைத்துப் பார்க்கும் போது கதிரமலையும்,கந்தரோடையும் ஒன்றெனக் கூறுவது பொருந்து மாறில்லை. அதேவேளை இக் கதிரமலை வலிகாமத்தில் இருந்ததா அல்லது யாழ்ப்பாணத்திற்கு வெளியே இருந்ததா என்பது எதிர்காலத்தில் விரிவாக ஆராயப்பட வேண்டிய முக்கிய விடயங்களில் ஒன்றாகும். (முற்றும்)

# விண்வெளியில் நடந்து புது சாதனை படைத்தது சீனா

(பீஜிங்)

மூன்று விண் வெளி வீரர்களுடன் சீனா அனுப்பிய ஷென்ஜோவ்-7 என்ற விண் கலம் வெற்றிகரமாக விண்ணில் இறங்கியுள்ளது.

இதில் சென்றுள்ள ஜியாய் ஜிகாங் என்ற வீரர் நேற்று 40 நிமிடம் விண்ணில் நடந்து சாதனை படைத்தார். இவர் சீனாவில் தயாரிக்கப்பட்ட விண்வெளி உடையை அணிந்து செல்கிறார் என்பது குறிப்



பிடத்தக்கது. அமெரிக்கா, ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக விண்வெளி ஆராய்ச்சியில் சாதனை படைக்க சீனா தொடர்ந்து தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வெற்றியும் அடைந்து வருகிறது.

## வெற்றிகரமாக விண்ணில்


2003ஆம் ஆண்டு சீனா முதல் முறையாக விண்கலத்தை அனுப்பியது இதில் ஒருவர் மட்டும் சென்றார். அடுத்ததாக 2005ஆம் ஆண்டு இரண்டு வீரர்களுடன் விண்கலத்தை அனுப்பியது. இதற்கு அடுத்த கட்டமாக மூன்று விண்வெளி வீரர்களுடன் ஷென்ஜோவ்-7 என்ற விண் கலத்தை கடந்த வியாழக்கிழமை சீனாவில் வடமேற்குப்பகுதியில் உள்ள ஜியு குவான் ஏவுதளத்திலிருந்து அனுப்பியது. இந்த விண் கலம் வெற்றிகரமாக விண்ணில் இறங்கியது. இதில் போர் விமான விமானியான ஜியாய் ஜிகாங் தலைமையில் லியு போமிங் ஜிங் ஹாய்பெங் ஆகிய மூன்று விண்வெளி வீரர்கள் ஷெர்ஜோவ் விண்கலத்தில் சென்றனர்.

விண்வெளி திட்டத்தை வெற்றிகரமாக்க இலட்சியத் திட்டமிட்டது. முழுக்க முழுக்க உள் நாட்டிலேயே தயாரிப்புகளை பயன்படுத்தும் வகையில் திட்டமிட்டது.

மேலும் விண்வெளி சாதனை முயற்சியை விண்கலம் புறப்படுவதில் இருந்து விண் வெளியில் சென்று இறங்கும் வரையும் பின் நேற்று விண்வெளியில் வீரர் நடப்பது வரை சீன மக்கள் டிவியில் நேரடியாகப் பார்க்கவும் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

## சீன உடை

நேற்று விண்வெளியில் 40 நிமிடம் நடந்த ஜியாய் ஜிகாங் அணிந்த விண்வெளி உடை முழுக்க முழுக்க சீனாவில் தயாரிக்கப் பட்டுள்ளது. இந்த உடைக்கு *பறக்கும் புத்த கடவுள்* எனப் பெயரிடப்பட்டுள்ளது. 44 இலட்சம் டொலர் செலவில் இந்த உடையானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த உடையை அணிந்து கொள்வதற்கே 15மணி நேரமாகுமாம் 15 அடுக்குகளைக் கொண்ட இந்த உடையின் எடை மட்டும் 120 கிலோக் கிராம்.




## உணவு

விண்வெளி வீரர்கள் எடுத்துச் சென்றுள்ள உணவுகள் கூட சீன தயாரிப்புகள் தான் செப்கள் இதற்காக விஷேச கவனம் செய்துள்ளனர். இதில் ஊறுகாய், சோஸ் ஆகியவை இடம்பெற்றுள்ளன. ஆனால் சோயா பால் முதலியவை விண் வெளி உணவாக ஏற்கப்படுவதில்லை. புவியீர்ப்பு இல்லாத நிலையில் வாயுப்பதார்த்தம் என்பது சரிப்படாது.

விண்வெளியில் வீரர்கள் தங்கியிருக்கும் போது குறைந்த அழுத்தம் காரணமாக உணவு சாப்பிட முடியாது. தவிரவும் சென்ற தடவை சிறு குழந்தைகளுக்கு மலஜலப் பிரச்சினைகள் தவிர்க்க டயபர் அணிவிப்பது போல ஏற்பாடு இருந்தது. இத்தடவை விண் வெளியில் மலசலகூட வசதி விண் கலத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.



## அடுத்த இலக்கு

விண்வெளியில் நிரந்தரமாக விண்வெளி நிலையம் அமைப்பது சீனாவின் அடுத்த திட்டம் இதற்கு முன்னோடியாக சிறிய ஆய்வகம் ஒன்றை அமைக்கிறது.

## தேர்வு எப்படி


விண்வெளிக்கு வீரர்களை அனுப்புவதற்காக 1998ஆம் ஆண்டு போர் விமான விமானிகள் 14 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களில் இருந்து இறுதியாக 6பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு தீவிர பயிற்சி அளிக்கப்பட்டு சாதாரண வாழ்க்கை முறையில் இருந்து விண்வெளிக்கு ஏற்ற வகையில் இருக்க கடும் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்கள் வெளியில் சாப்பிட ஆசைப் பட்டாலும் முடியாது. பயிற்சி நிலையத்தில் வழங்கப்படும் உணவைத்தான் சாப்பிட வேண்டும்.

மேலும் தங்களை அடையாளம் காட்டிக்கொள்ளாமல் வெளி உலகத்தொடர்பு இன்றி பயிற்சி பெற்று வந்தனர். பயிற்சிக் காலத்தில் இவர்கள் குடும்பத்தினரை சந்திப்பதே அபூர்வமாக இருந்தது. இருப்பினும் கடந்த வியாழக் கிழமை இவர்கள் விண்ணுக்கு புறப்பட்டபோது இவர்களது குடும்பத்தினர் உறவினர்கள் மகிழ்ச்சி பொங்க வழியனுப்பி வைத்தனர்.

நேற்று விண் வெளியில் நடந்ததன் மூலம் ஜியாய் ஜிகாங் விண்வெளியில் நடந்த முதல் சீன வீரர் என்ற பெருமையைப்பெறுகிறார். 42 வய தான இவர் ஆங்கிலம் முதல் இயற்றியல் வரை மற்றும் வானியியல் என 58 பாடங்களை படித்துள்ளார்.

விண்வெளியில் இருந்து குடும்பத் தாருடன் உரையாடுவதற்காக இவருக்கு தனியாக போன் இணைப்பும் கொடுக்கப்பட்டுள்ளது.

விண்வெளிக்குச் சென்ற முதல் சீன வீரரான யாங் லி கடந்த ஆண்டு கட்சிக் கூட்டத்தில் பேசுகையில் கம்யூனிஸ்ட் கட்சி விண்வெளியில் விரைவில் கிளைரயைத் ஆரம்பிக்கும் என்று குறிப்பிட்டிருந்தார். சீனா கம்யூனிஸ் கட்சியில் விதிப்படி ஒரு கூட்டத்தை கூட்டுவது என்றால் மூன்று உறுப்பினர்கள் தேவை. அந்த வகையில் இப்போது மூன்று வீரர்கள் விண்வெளிக்குச் சென்றுள்ளனர்.


ஜியாய் ஜிகாங்

சீன அரசு பத்திரிகையான தி பீப்பிள்ஸ் டெய்லி நேற்று முன்தினம் வெளியிட்ட தலையங்கத்தில் ஒலிம்பிக்கை தொடர்ந்து உலகத்தின் பார்வை மீண்டும் சீனா பக்கம் திரும்பியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளது.

**முழுக்க முழுக்க உள்ளூர் தயாரிப்புகளையே விண்வெளியில் பயன்படுத்தி காட்டியது**

**ஆர்.யூ.பாலமுருகன்**

# ஆங்கிலக் கால்வாயில் இறக்கை கட்டி பறந்தவர்

சுவிஸ் நாட்டின் சாகசக்காரர்களில் ஒருவரான யீவ்ஸ் ரொஸ்லி என்பவர் தான் ஜெட் இயந்திரம் பொருத்தப்பட்ட ஒரு இறக்கையை மட்டும் உடலில் கட்டிக்கொண்டு முதல் தடவையாக பிரான்ஸில் இருந்து கடலைக் கடந்து பிரிட்டனுக்கு பறந்தவர் என்ற பெயரை பெற்றுள்ளார்.



பிரான்ஸ் எல்லையில் ஒருவிமானம் மூலம் 2500 மீற்றர் உயரத்தில் பறந்த போது விமானத்தில் இருந்து இறக்கையைக் கட்டிக்கொண்டு குதித்து தனது ஜெட் இயந்திரங்களை ஓட விட்டு ஆங்கிலக் கால்வாய் என அழைக்கப்படும் அந்தக் கடல் பகுதியை அவர் கடந்துள்ளார்.

உலகில் கப்பல் போக்குவரத்து அதிகம் நிறைந்த கடல் பகுதி இது என்பது குறிப்பிடத்தக்கது.

தனது உடலை அசைத்து குறித்த திசையில் சுமார் பத்து நிமிடம் பறந்து பிரிட்டனிலுள்ள டோவர் நகரின் அருகிலிருக்கின்ற வெண்ணிற மலைக் குன்றுகளில் ஒன்றில் இவர் பாரசூட் மூலம் தரையிறங்கினார்.

# டாக்டர் உடைகளில் நுண்கிருமிகள் நோய்தொற்று ஏற்படுத்தும் அபாயம்

டாக்டர்களின் உடைகளில் இருக்கும் நுண் கிருமிகளால் நோய் தொற்று ஏற்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு நோய்த் தொற்று அபாயம் குறித்து தொடர்ந்து ஆய்வுகள் நடந்து வருகின்றன.

நோயாளியை பரிசோதித்து முடிக்கும் ஒவ்வொரு முறையும் டாக்டர்கள் தங்களின் கைகளை கழுவிக்கொள்வதை மருத்துவ மனை நிர்வாகங்கள் ஊக்குவித்து வருகின்றனர். அதேபோல் மருத்துவ உபகரணங்கள் கொதி நீரில் சுத்திகரிக் கப் பட்ட பிறகே பயன்படுத்தும் முறையும் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

குவீன்ஸில் உள்ள நியூயோர் மைய மருத்துவ மனையில் 40 டாக்டர்கள் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் 10 பாதுகாவலரின் டை ஆராயப்பட்டது. அப்போது டாக்டர்கள் மற்றும் மருத்துவக்கல்லூரி மாணவர்களில் பாதிப்பேர் அணிந்திருந்த ரைகளில் நோய்த்தொற்று ஏற்படுத்தக்கூடிய நுண் கிருமிகள் இருந்தது. தெரியவந்தது இதே போல் மருத்துவமனை காவலர்களில் 10 பேரில் ஒருவர் அணிந்திருந்த உடையில் நுண் கிருமிகள் இருந்தது தெரியவந்தது.

அதேபோல் டாக்டர்கள் அணியும் முழுக்கை வெள்ளைக்கோட்டிலும் கைப்பகுதியில் நுண்கிருமிகள் இருப்பது தெரியவந் தது. இதைத்தொடர்ந்து பிரிட்டனில் டாக்டர்கள் ரை அணிவதற்கும் முழுக்கை சட்டை அணிவதற்கும் தடை விதிக்கப்பட்டது.

நிமோனியா உள்ளிட்ட பல்வேறு நோய்த் தொற்றுக்களை இந்த நுண் கிருமிகள் ஏற்படுத்த கூடியவை எனவே டாக்டர்கள் தங்களின் உடை விசயத்திலும் எச்சரிக்கையாக இருக்கும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.



Lifeline
# மீண்டும் வாழ்வோம்
இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்
Humanitarian Information For IDPs

## துயர் துடைப்பார் யாருமின்றி தனித்து விடப்பட்ட வன்னி மக்கள்

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளை அடுத்து வன்னியிலிருந்து ஐக்கிய நாடுகள் அமைப்புகள் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் அனைத்தும் முற்றாக வெளியேறியுள்ளன .வன்னியில் இடம் பெயரும் மக்களுக்கு வேண்டிய மனிதாபிமான பணிகளை மேற்கொள்வதற்கு ஏற்பட்டுள்ள இடைவெளியை அரசாங்க அதிபர்களின் நடவடிக்கைகளை பலப்படுத்துவதன் மூலம் நிவர்த்தி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அரசாங்கத்தின் இந்த செயற்றிட்டம் குறித்து கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகனை தொடர்பு கொண்டு கேட்ட போது தனது மாவட்டத்தில் செயற்பட்டு வந்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவ னங்களில் பணியாற்றிய கிளிநொச்சி மாவட்ட பணியாளர்கள் அரசாங்க அதிபரின் கீழ் தமது பணிகளை தொடர்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

**வன்னியிலிருந்து மனிதாபிமான தொண்டர் அமைப்புக்கள் அனைத்தும் வெளியேறிய நிலையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தமது பணிகளை அரசாங்கத்தின் அனுமதியுடன் அங்கு தொடர்கிறது.**

அரசாங்க அதிபரின் கீழ் பணியாற்ற விரும்பும் பணியாளர்கள் தொடர்பான விபரங்களை அவர்கள் பணியாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமக்கு வழங்குவதற்கு இணங்கி யுள்ளதாகவும் அரசாங்க அதிபர் கூறினார்.

இதன் அடிப்படையில் அவர்களுக்குரிய வேலைகளை தாங்கள் தீர்மானிக்கவுள்ளதாகவும் அவர்களுக்குரிய கொடுப்பனவுகளை அந்தந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கவுள்ளதாகவும் இதன் காரணமாக கிளிநொச்சி மாவட்



வன்னியில் இடம்பெயர்ந்து வாழும் குடும்பம்

டத்தில் தோன்றியுள்ள மனிதாபிமான பணிகளுக்கான வெற்றிடங்களை ஓரளவிற்கு குறைக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வன்னியிலிருந்து மனிதாபிமான தொண்டர் அமைப்புக்கள் அனைத்தும் வெளியேறிய நிலையில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் தமது பணி களை அரசாங்கத்தின் அனுமதியுடன் அங்கு தொடர்கிறது. தற்பொழுது தோன்றியுள்ள அசாதாரண சூழல் செஞ்சிலுவைச் சங்கத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் குறித்து அவ் அமைப்பின் குரல் தரவல்ல அதிகாரியான அலெக்சாண்ட்ரியா மெற்றிஜெவி கருத்து வெளியிடும் போது ,சர்வதேச தொண்டு நிறுவனமான செஞ்சிலுவைச்சங்கம் உலகளாவிய ரீதியான தனது கொள்கைகளின் அடிப்படைக் கிணங்க வன்னி மாவட்டத்தில் தொடர்ந்தும் தனது மனிதாபிமான பணிகளை முன்னெடுத்து வருவதாக கூறினார்.

தமது பாகுபாடற்ற மத்தியஸ்தத்தை தொடர்ந்தும் முன்னெடுக்கப்போவதாக கூறிய அலெக்சாண்ட்ரியா குறிப்பாக ஓமந்தைப் பகுதி ஊடாக போக்குவரத்தில் ஈடுபடும் மக்களுக்கு தேவையான ஒத்துழைப்புக்கள்ளையும் மற்றும் அந்தப் பகுதி ஊடான வாகனப் போக்கு வரத்து, நோயாளர் காவு வாகனப் போக்கு வரத்திற்கான அனுசரணையினையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வழங்கும் என்றும் கூறினார். அத்துடன் வன்னிப் பகுதியில் மனிதாபிமான தேவைகளை கண்காணி ப்பது குறித்து தொடர்ச்சியான கலந்து ரையாடல்கள் மேற்கொள் ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித் தார்.

இதேவேளை இடம்பெயர்ந்த மக்களுக்கு தேவையான தற்காலிக தங்குமிட வசதிகள் ,சமைத்த உணவு , உலர் உணவு மருந்து வகைகள்,உடுபுடவை வசதிகள், நீர் வசதிகள் ஆகியவற்றை வழங்குவதற்கும், மின்சாரவசதியை வழங்குவதற்குமான அனைத்து ஏற் பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் செயலாளரான ஏ.சி. ஆர். ரஷீக் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு மாத்திரம் கடந்த ஒரு மாத காலமாக இந்த தேவைகளுக்கென 25 மில்லியன் ரூபா பணம் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் தற்பொழுது உள்ள நிலைமைகளை கையாள்வதற்கென வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருக்கு 50 இலட்சம் ரூபா வழங்கப் பட்டுள்ளதாகவும் ரஷீக் குறிப்பிட்டுள்ளார். வன்னி யிலிருந்து அரச கட்டுப் பாட்டில் உள்ள வவுனியா நோக்கி இடம்பெயரும் மக்களுக் குத்தேவைப் படும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான முன்னேற்பாடு நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வவுனியா நோக்கி இடம்பெயரும் மக்களின் இருப்பிட வசதிகளை கையாள் வதற்கு ஒருகுழுவும் முகாமைத்துவ ம் சம்பந்தமான விடயங்களை கையாள்வதற்கு ஒரு குழுவும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒரு குழுவும் தண்ணீர் வசதிகளுக்கென ஒரு குழுவும் கல்வி நடவடிக்கைகளை கையாள் வதற்கென ஒருகுழுவுமாக பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சாள்ஸ் கூறினார்.

வன்னியிலிருந்து இடம்பெயரும் மக்களை வவுனியாவில் தற்காலிகமாக தங்க வைப்பதற்கான தங்குமிட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் நீண்ட கால குடியமர்த்தலுக்காக மெனிக்பாம் பகுதி தயார் படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். இதேவேளை இடம்பெயர்வுகள் நாளாந்த நிகழ்ச்சிகளாகி போய்விட, மக்களுக்கு நிரந்தர அமைதி மட்டுமே ஆறுதலை தர முடி யும் என்பதே பலரினதும் ஒரு மித்த கருத் தாகும்.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எவ்.எம். வானொலியூடாக சனிக்கிழமைகளில் காலை 6 மணி முதல் 8 மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எவ்.எம். வானொலியூடாக (F.M.102 Mhz) ஞாயிற்றுக் கிழமைகளில் பி.ப. 1.30 மணிமுதல் 2 மணிவரையும் புத்தளப்பிரதேசத்தின் அநூர் எவ்.எம்.ஊடாக ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 6.45 முதல் 7.15 மணிவரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.radio.voi cesafpeace.lk என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

## சிறுவர் தினமும் தீர்க்கப்படாத பிரச்சினைகளும்

இந்த கட்டுரையை வாசித்துக் கொண்டிருக்கும் இந்தக் கணப் பொழுதில் உலகில் ஏதோ ஒரு பகுதியில் ஒருகுழந்தை உயிரிழந்திருக்கும் இந்த செய்தி அதிர்ச்சியளிக்கலாம். ஆனால் இதுதான் உண்மை.

உலகில் ஒவ்வொரு வருடமும் சராசரி 10 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் பல்வேறு காரணங்களால் உயிரிழப்பதாக புள்ளி விபரங்கள் வெளியாகியுள்ளன. உலகளாவிய ரீதியில் போசாக்கான உணவிற்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு முதல் அடிப்படை சுகாதாரவசதிகளைக்கூட பெற முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுவரும் மக்கட் தொகையின் அதிகரிப்பு வரை பல காரணங்களை சிறுவர் பாதுகாப்பு அமைப்புக்கள் முன்வைத்து வருகின்றன. ஆனாலும் சிறுவர் இறப்பு வீதத்தை கட்டுப்படுத்தவோ அல்லது அதனைக்குறைப்பதற்கோ இன்னும் முடியாதளவே உலகம் இயங்கி வருகின்றது.


ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் முதலாம் திகதி சிறுவர்கள் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சிறுவர் பாதுகாப்பின் அவசியம் குறித்தும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்குமாக இந்த தினம் சிறப்பு முறையில் உலக நாடுகளில் கொண்டாடப் படுகிறது. இலங்கையில் தொடர்ச்சியான யுத்த அனர்த்தங்களால் அதிகளவில் சிறுவர்களே பாதிக்கப்பட்டு வருவதாக பல்வேறு சிறுவர் பாதுகாப்பு அமைப்புக்களும் ஐக்கிய நாடுகளும் சுட்டிக்காட்டி வருகின்றன.

தொடர்ச்சியான இடம்பெயர்வுகள் சிறுவர்களை மனச் சிதைவுகளுக்கு உள்ளாக்குவதாகவும் இதனால் அவர்கள் உளவியல் ரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாவதாகவும் மருத்துவ வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

**மீண்டும் வாழ்வோம்**

"மீண்டும் வாழ்வோம்" திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள் குடியேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயற்திட்ட அமைப்புக்களின் ஓர் அங்கமாகும்.

இடம்பெயர்வுகள் தொடர் கதையாகிப் போன வன்னிப்பெரு நிலப்பரப்பில் வாழும் சிறுவர்களின் போசாக்கு உணவு குறித்து சிறுவர் பாதுகாப்பு அமைப்புக்கள் கவலை வெளியிட்டுள்ளது. அந்த அமைப்பின் அரசாங்கத்தின் வேண்டுகோளை ஏற்று கிளிநொச்சியிலிருந்து வெளியேறுவதற்கு முன்பாக அப்பிரதேசங்களில் குழந்தைகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்



கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த மாத செயற்பாடுகள் குறித்த அந்த அமைப்பின் அறிக்கையின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெயர்ந்துள்ள 3ஆயிரத்து 500 சிறுவர்களுக்கு தேவையான சிறுவர் ஆடைகளையும் ஆயிரத்து 200 அடிப்படை சுகாதாரப்பொதிகளையும் இந்த அமைப்பு வழங்கியுள்ளது.

குறிப்பாக நலன்புரி நிலையங்களில் வாழும் சிறுவர்களை ஒன்று திரட்டி சிறுவர் கழகங்களை அமைத்து அதன் மூலம் சிறுவர்கள் உளநலன் விருத்தி செயற்பாடுகள் சிறுவர் பாதுகாப்பு அமைப்பு நடைமுறைப்படுத்தி வருகிறது. இதேவேளை பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கும் வாழ்வாதார உதவிகளை சிறுவர் பாதுகாப்பு அமைப்பு வழங்கி வருகிறது. தொடர்ச்சியான யுத்த முனைகள் மற்றும் இடம் பெயர்வுகள் சிறுவர் சுயாதீன போக்கு வரத்திற்கான கட்டுப்பாடுகள் என்பன வன்னியில் வாழும் சிறுவர்கள் முகம் கொடுத்து வரும் பிரச்சினைகள் ஏராளம்.

இதேவேளை அமைதியான வாழ்க்கைச் சூழல் நிலவும் இலங்கையில் ஏனைய பகுதிகளில் வாழும் சிறுவர்களுக்கும் பல்வேறு விதமான பாதிப்புக்களை எதிர் நோக்கி வருவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு செயலகம் தெரிவித்துள்ளது குழந்தை தொழிலாளர்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன் முறைகள் என நாளாந்தம் தமக்கு முறைப் பாடுகள் கிடைத்துவருவதாக அந்த அமைப்பின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

குழந்தைகள் மீதான வன்முறைகள் அவர்களிற்கு நெருக்கமானவர்களாலேயே அதிகளவில் மேற்கொள்ளப்பட்டுவருவதாக அவர் சுட்டிக்காட்டினார். அதிகரித்து வரும் பொருளாதாரச்சுமை காரண மாக சிறுவர்கள் கற்றல் செயற்பாடு களை இடைநிறுத்தி தொழில் புரியும் நிலைக்கு தள்ளப் படுகின்றனர். சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல் தண்டனைக் குரிய குற்றமாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் குழந்தைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது.

இதேவேளை போது மான போசாக்கு உணவைப் பெற முடியாததால் குறைந்த நிறை கொண்ட சிறுவர்களின் எண்ணிக்கை கையும் கணிசமாக அதிகரித்துள்ளது. எதிர்பார்க்கப் பட்ட அளவினை விட மூன்று மடங்கு சிறுவர்கள் குறைந்த நிறையுடன் காணப்படுவதாக உலக உணவுத்திட்டத்தின் பிரதித்தலைவர் [illegible] தெரிவித்துள்ளார்.

சிறுவர் உரிமைகள் குறித்து சிறுவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டங்கள் பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப் பட்டு வந்தாலும் அவை போதுமானதல்ல என தருவதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்பது கவலைக்குரிய நிஜம். அதுவரை தினமும் பல்வேறு வழிகளில் பாதிப்புக்களிற்குள்ளாகும் சிறுவர்களை பாது காப்பதற்கு எங்களால் முடிந்த நடவடிக்கைகளை நாம் ஒவ்வொரு தருணமும் மேற்கொள்வதே இன்றைய காலத்தின் தேவையாகும்.

**உங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்**

மீண்டும் வாழ்வோம்

த.பெ.இல.1039 கொழும்பு

தொ.பே. -0774952242

மின்னஞ்சல்- info@lifeline.srilanka.com

## உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் இடம் பெற காத்திருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத் தருகின்றோம். வடக்கு கிழக்குப்பகுதிகளிலிருந்து பல்வேறு காரணங்களால் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்கு சிறுவர் கல்வி குறித்து எடுத்துக் கூறும் வகையில் *சிறுவர் கல்வி* குறுநாடகம் அமைந்தது. குறுநாடகத்தின் தொகுப்பு கீழே தரப்படுகின்றது.

## சிறுவர் கல்வி



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் உங்கள் கதைகள் குறுநாடகப் பகுதியில் சிறுவர் உரிமைகள் தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பல நாடகங்களை வழங்கியிருந்தோம். சிறுவர்களது எதிர்காலத்தில் முக்கிய பங்கு வகிப்பது கல்வி. இந்த விடயம் தொடர்பாகவே கடந்த வாரம் சிறுவர் கல்வி என்ற நாடகம் ஒலிபரப்பானது. வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி பற்றி பெரிதாக சிந்திப்பதில்லை. காரணம் அவர்களைச் சூழந்துள்ள வறுமை.

தற்போது எமது நாட்டைப் பொறுத்தவரையில் யுத்தத்தினால் சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் சிறார்கள் தமது கல்வியைத்தொடர்வதில் பெரும் இன்னல்களை எதிர்கொள்கிறார் கள். குடும்ப சூழ் நிலை காரணமாக சில பெற்றோர் தமது பிள்ளைகளை மிகச் சிறிய வயதிலேயே வேலைக்கு அனுப்புகிறார்கள். சில பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புகிறார்கள். ஒரே முகாமிலிருந்து பாடசாலைக்குச் சென்று வந்த கண்ணன் , ராஜா என்ற சிறுவர்களில் ராஜாவின் குடும்பம் கஷ்டத்தின் காரணத்தால் அவனது பெற்றோர் அவனை பாடசாலையிலிருந்து இடைநிறுத்தி விட்டார்கள். ஆனால் கண்ணன் தொடர்ந்து பாடசாலைக்கு செல்கிறான். கண்ணன் பாடசாலைக்குச் சென்று வரும் போதெல்லாம் பார்க்கும் ராஜாவுக்கு தனது படிப்பை இடையில் நிறுத்திய பெற்றோர் மீது கோபம் வருகிறது. சிறு வயதிலிருந்து நண்பனாக இருந்த கண்ணனுடன் பேசுவதற்கு கூட தயக்கம் காட்டுகிறான். மன தளவில் தாக்கத்தோடு வேலைக்குச் சென்று வரும் ராஜாவைப்பற்றி அவனது பெற்றோர் அக்கறை காட்டாமல் தொடர்ந்து வேலைக்கு அனுப்புகிறார்கள்.

இந்தநிலையில் சிறுவர் கட்டாயக்கல்வி தொடர்பாக செயற்பட்டுவரும் தொண்டர் நிறு வனம் ஒன்றிலிருந்து வரும் குமரன் என்ப வர் பாடசாலை செல்லும் வயதில் சிறுவர் தொழிலாளியாகப்பணிபுரியும் ராஜாவின் தாயிடம் சிறுவர்களின் கட்டாயக்கல் விக் கான முக்கியத்துவம் பற்றி தெளிவாகக் கூறுகிறார். சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது மட்டுமல்ல அவர்களை வேலைக்கு அனுப்புவது கூட குற்றமான செயல் தான் என்று கூறுகிறார். குடும்ப சூழ்நிலை காரணமாக தான் தனது பிள்ளையை வேலைக்கு அனுப்பியதாக ராஜாவின் தாய் கூறினார். ராஜாவின் குடும்ப சூழ்நிலையை புரிந்து கொண்ட குமரன் தனது நிறுவனம் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் சிறுவர்க ளின் கல்விக்காக சில உதவிகளை வழங்கு வதாகவும் ராஜாவும் அந்த உதவிகளைப் பெற்றுக்கொண்டால் தொடர்ந்து பாடசாலைக்குச் செல்ல முடியும் என்றும் கூறுகி றார். ராஜாவின் தாயார் தனது பிள்ளையின் எதிர்காலத்தைப்பற்றி தான் சிந்திப்பதாகவும் அதற்காக தான் மகனை மறுபடியும் பாடசாலைக்கு அனுப்புவதாகவும் கூறினார். ஒவ்வொரு பெற்றோரும் கட்டாயமாக தமது பிள்ளைகளின் கல்வி பற்றி சிந்தித்தே ஆக வேண்டும். காரணம் இனிவரும் காலங்களில் கல்வியின் முக்கியத்துவம் அதிகரித்தே காணப்படும். பிள்ளையின் கல்வியில் அக்கறை காட்டாத பெற்றோருக்கு சிறுவர்களின் கட்டாயக்கல்வி தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாடகத்தின் நோக்கமாகும்.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் பகுதிக்கு உங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள் இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளாக ஒலிபரப்ப காத்திருக்கின்றோம். உங்கள் கதைகள் மற்றவர்களுக்கும் படிப்பினையாக அமையும் என்பதே மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் எதிர்பார்ப்பாகும்.

# விலங்கு விசர் நோயும் விழிப்புணர்வும்

## இன்று உலக விலங்கு விசர் நோய் தடுப்பு தினம்

இலங்கையில் ஏறத்தாள 3 மில்லியன் நாய்கள் உள்ளன. இவற்றில் 20வீத நாய்கள் அலைந்து திரியும் கட்டாக்காலி நாய்கள். எஞ்சிய 80 வீதத்தில் 70வீத நாய்கள் உரிமை யாளர்களால் சரியான முறையில் பேணி வளர்க்கப்படாதவை. மிகுதி 10வீத நாய்கள் மாத்திரமே குடியிருப்பாளரால் உரிய முறை யில் சுகாதாரமாக வளர்க்கபடுகின்றன. (Bomesticated dogs) இலங்கையில் கடந்த வருடம் நாளொன்றிற்கு 2 ஆயிரம் பேர் நாயினால் கடியுற்றுள்ளார்கள். வருடத் தில் ஏறத்தாள 7இலட்சத்து 30 ஆயிரம் பேர் கடியுற்றனர். கடந்த வருடம் 56 இறப்புக்கள் நாய்க்கடியால் நிகழ்ந்துள்ளன.மேலும் இவ் வருடத்தின் முதல் 2 மாதங்களிலும் 10 பேர் விலங்கு விசர்நோயால் இறந்துள்ளனர். விலங்கு விசர்நோயைக் குறைப்பதற்காக கடந்த வருடம் சுகாதார அமைச்சு 3 இலட் சத்து 17 ஆயிரம் வக்சீன்களை நாய்களுக் குப் பயன்படுத்தியுள்ளது. நாய்களுக்கு விலங்குவிசர் நோய் தடுப்பூசி (A.R.V) வழங்கப்படுவதுடன் பெண் நாய்களுக்கு கருத்தடைச் சத்திரசிகிச்சைகளும், 6 மாதத்திற் கொரு முறை கருத்தடை ஊசியும் வழங்கப் படுகின்றது.

**வீட்டு வளர்ப்பு நாய்கள் மனிதர்களைக் கடிக்கும் சந்தர்ப்பங்கள் சில**

- வீட்டில் கட்டி வளர்க்கப்படாத அல்லது கூண்டில் வளர்க்கப்படாத நாய்கள் வீதிக்குச் செல்லும் போது வீதியால் செல்பவர்களை கடிக்கின்றது.
- நாய்களுக்கு கல்லினால் எறிந்து அல்லது சீற்றங் கொள்ளும் படி ஏற்படுத்தும் மனித நடவடிக்கையால் மனிதர்களை குறிப்பாக சிறுவர்களை கடிக்கலாம்.
- தவறுதலாகவோ அல்லது தெரிந்தோ நாயின் மீது மிதித்தல்
- திருட்டுத்தனமாக காணியினுள் அல்லது வீட்டினுள் புகும்போது
- சாப்பாட்டு வேளையில் யாரேனும் வீட்டிற்குள் அலட்சியமாக கவனமற்று பிரவே சிக்கும் போது.
- குட்டி போட்டுள்ள நாய்கள் தனது குட்டியை யாரும் தூக்கும் போது அல்லது குட்டிகளுக்கு அண்மையில் புதிதாக யாரும் செல்லும் போது.
- "நாய் கடிக்கும் கவனம்" என வளவின் கதவில் எழுதப்பட்டிருந்தால் அலட்சியப் போக்காக அவ்வளவினுள் பிரவேசிக்கும் போது
- நாய் குரைத்தபடி வரும் போது பெரும் பாலான சிறுவர்கள் ஓட முற்படும் போது நாயினால் கடிக்கப்பட வாய்ப்புண்டு. இதே வேளை கட்டாக்காலி நாய்கள் வீதியால் செல்பவர்களை கடிக்கும்-வாய்ப்பும் உண்டு.

**விலங்கு விசர் நோய் காணப்படும் நாயிலுள்ள பொதுவான அறிகுறிகள்**

குறித்த நாய் கோபமடைந்து காணப்படு வதுடன் மூர்க்கத்தனமாக கண்ணில் தென் படும் பொருட்களைக் கடிக்கும். நீர் , உணவு விழுங்க முடியாது கஸ்டப்படும், உமிழ்நீர் வழுந்த வண்ணம் இருக்கும், அசாதாரண மாக ஊளையிடும். கண்கள் சிவந்திருக்கும் திடீரென மனிதர்களையும் விலங்குகளை யும் கடிக்கும். வாலை கீழ் நோக்கி வளைத் திருக்கும்/சுருண்டிருக்கும் அசாதா ரண நடத்தையின் பின்பு இறந்துவிடும். மேற்படி இயல்புகளை வெளிக்காட்டாது விலங்கு விசர் நோய்க்கிருமிகளை தன்ன கத்தே கொண்டு திடீர், திடீரென மனிதர் களைக் கடிக்கத் தொடங்கும் நாய்களும் உண்டு

**விலங்குவிசர் நோய் மனிதனில் ஏற்பட்டால் காணப்படும் அறிகுறிகள்**

பொதுவாக நாய்கடித்த இடத்தில் சொறிவு, குழப்பநிலை, உணவு, நீரை விழுங்குவதில் சிரமம், அதிகரித்த காய்ச்சல், அதிகரித்த வியர்வை, கோபமடைதல், மூர்க்கத்தன மாக ஆக்ரோசமான நடத்தைகளைக் காட்டல், அதிகரித்த உமிழ்நீர்ச்சுரப்பு, சுயாதீன மற்ற நிலை, உணர்சியற்றுப் போதல், வலிப்பு ஏற்பட்டு படிப்படியாக இறப்பு நேரிடும்.

**வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி**

மூன்று மாதத்திற்கு மேற்பட்ட சகல வளர்ப்பு நாய்களுக்கும் விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி (Anti Rabies Vaccine-ARV) பெற்றுக் கொள்முடியம். ஆரோக்கி யமான கர்ப்பமான நாய்களுக்கும் இது பொருந்தும். இலங்கையில் வளர்ப்பு நாய்களுக்கு ARV வழங்குவதற்காக விசேட பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் பொதுச் சுகாதாரப் பகுதியி னருடன் இணைந்து ARV ஊசியை குடியிருப் புகளில் உள்ள நாய்க ளுக்கு வருடாவருடம் வழங்கி வருகின்றனர் ஊசிவழங்கியதற்கான அட்டையும் வழங் குவர். தொடர்சியாக மூன்று வருடம் ARV ஊசியைப் பெற்ற நாய்கள் பெரும்பாலும் விலங்குவிசர் நோய்க்கு ஆளாவது குறைவு கட்டாக்காலி நாய்களுக்கு ARV வழங்கமுடிவதில்லை.

**விலங்கு விசர் நோய்க்கிருமி**

இது விலங்குகளின் உடலில் மாத்திரம் வாழக் கூடிய வைரசு வகைக் கிருமியாகும். இவ் வைரசானது உடலின் நரம்புத் தொகுதி யை பாதிப்படையச் செய்வதால் உடலின் சுவாசம், இதயத்துடிப்பு, உணர்ச்சி போன்ற வற்றிற்குரிய செய்திப் பரிவர்த்தனை படிப்படி யாகப் பாதிக்கப்படுவதால் இறப்பு நேரிடும். விலங்கு விசர் நோய் ஏற்பட்டு விட்டால் பெரும் பாலும் இறப்பு நிச்சயம். விலங்கு விசர் நோயு டைய விலங்கு இன்னொரு விலங்கை காயப்படுத்தும் போது /கடிக்கும் போது ஊமிழ்நீரினூடாக இரத்தத்தினூடாக மற்றைய விலங்கை இந்நோய்க் கிருமி தொற்றிக் கொள்கிறது. விலங்கு விசர் நோய் விலங்கின் தலையை ஆய்வுகூடத்தில் பரிசோதித்து இந்நோயை உறுதிப்படுத்த முடியும்.

**விலங்கொன்றினால் (நாய்/பூனை) கடியுண்ட ஒருவர் சிகிச்சைக்காக வைத்திய சாலைக்குச் செல்லும்போது வைத்தியர் கடியுண்டவரில் எதிர்பார்க்கும் விடயங்கள்**

1) விலங்கு கடித்த திகதி, 2) காயம் ஏற்பட்டதற்காக சிகிச்சை பெற்ற திகதி (சிலர் நாய் கடித்தவுடன் சிறிய மருத்துவமனையில் மருந்து கட்டிய பின் விலங்கு விசர் நோய், தடை ஊசியை பெறுவதற்காக பெரிய வைத் தியசாலையை நாடும் போது முதலில் சிகிச்சை பெற்ற திகதி குறிப்பிட வேண்டும். காயம் ஏற்பட்ட தினம் வைத்தியசாலைக்கு நேரடி யாக வந்தால் அன்றைய தினம்), 3) கடியுண் டவரின் தெளிவான பெயர்,வயது, பால், 4) தெளிவான முகவரி, 5) கடித்த அல்லது காயப் பட்ட உடலின் பகுதிகள் (வெட்கம் காரணமாக விலங்கினால் காயம் ஏற்பட்ட அங்கப் பகுதி களை வைத்தியரிடம் கூறாமல் விடுவதால் உயிர் ஆபத்து ஏற்பட வாய்ப்புண்டு), 6) காயத்தின் தன்மை (அதாவது ஆழமற்ற மேற்பரப்பில் ஏற்படும் காயம், ஆழமான காயம், பலவகையான காயம்), 7) என்ன விலங்கு கடித்தது (உதாரணமாக நாய், பூனை, குரங்கு.... ), 8) எத்தகைய பரா மரிப்பான விலங்கு (வீட்டில் வளர்க்கப்படு வது, கட்டாக்காலியாக அலைந்து திரியும் விலங்கா), 9) கடித்த/ காயத்தை ஏற்படுத்திய விலங்கின் உரிமையாளரின் பெயருடன் கூடிய முகவரி அல்லது கடியுண்ட சம்பவம் நடைபெற்ற முகவரி, 10) கடியுண்ட பிரதேசத் தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவு(P.H.I) , கிராம உத்தியோகத்தர்(G.S) பிரிவு கடியுண்ட பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிபிரிவு(M.O.H) அல்லது பிரதேச செயலாளர் பிரிவு (D.S), 11) கடித்த விலங்கு விசர்நோய் தடை ஊசிமருந்து பெற்றுள்ள தா? (கடித்த விலங்கிற்கு விலங்குவிசர் தடை ஊசி (A.R.V) போடப்பட்டிருந்தால் இதற்கு ஆதாரமாக நாயின் உரிமையாளருக்கு வழங்கப்பட்ட A.R.V அட்டையை பெற்று வைத்தியசாலைக்கு கொண்டுவருதல் சாலச் சிறந்தது)., 12) கடித்தவிலங்கை கடித்த நாளிலிருந்து 14 நாட்கள்அவதானிக் முடியுமா? (இக்கேள்விக்கு 'ஆம்' எனின் இக்காலப்பகுதியில் நாய் கூண்டில் வைத்தோ கட்டிவைத்தோ அவதானிக்கப்படவேண்டும். இக்காலப்பகுதியில் நாய் இறந்தால், மூர்க் கத்தனமாக இறந்தால், கடித்தால், காணாமல் போனால், கொலை செய்யப்பட்டால் உடனடி யாக வைத்தியசாலை வைத்தியருக்கு அறி விக்க வேண்டும்.

**நாய்/விலங்கொன்று கடித்தபோது உண்டான காயத்திற்கான ஆரோக்கியமான நடவடிக்கைகள்**

1. விலங்கினால் காயம் ஏற்படுத்தப்பட்ட பகுதியை ஓடும் நிரினால் நன்கு கழுவுதல் (நீரினை காயத்தின் மீது பாதுகாப்பாக ஊற்று தல்) கழுவப்படும் நேரத்தை காயத்தினால் ஏற்படும் குருதிப்பெருக்கே தீர்மானிக்கும். எனினும் சாதாரணமாக 3-5 நிமிடம் வரை சவர்க்காரமிட்டு ஓடும் நீரில் கழுவுதல் நன்று.

2. தூய்மையான துணியால் தெருத்தூசி மண்சேராதவாறு காயத்தினை மூடி முடிச் சிட்டு விரைவாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுதல் வேண்டும்.

3. வைத்தியசாலையில் காயமானது நுண்ணுயிர் தொற்றுநீக்கியால் (70% மதுசாரம், அல்லது புறோ அயடீன்கரைசல்) தூயதாக்கப்பட்டு பின்பு மருந்திடப்படும்.

4.காயத்தின் தன்மை, கடடியுண்டவரின் விபரம் போன்ற காரணங்களைப் பொறுத்து வைத்தியர் ஏற்பூசி வழங்க சிபாரிசு செய்ய முடியும். சிலவேளைகளில் சிலநுண்ணுயிர் கொல்லித் திறமைவாய்ந்த மருந்துகளையும் வைத்தியர் சிபாரிசு செய்வார்.

5. காயத்தின் தன்மை காயம் ஏற்பட்ட இடம் கடியுண்டவரில்இருந்துபெற்றுக்கொண்ட தகவல் களைக் கொண்டு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி வழங்கப்படுதல் சிபாரிசு செய்யப்படும்.

**விலங்கு விசர் நோயை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்**

பொது இடங்களில் பிரதேச ரீதியாக திண்ம,திரவ கழிவகற்றல் முறையை மேம் படுத்தல்.( இதற்காக ஆளணி, போக்கு வரத்து, இடம், பணம் போதிய தடையின்றி கிடைத்தல் வேண்டும்). திணைக்களங்கள், சபைகள், நிறுவனங்கள் மீது நாய்களை அழித்தல் தொடர்பாக முழுப்பொறுப்பையும் திணிக்காது முழுமனதுடன் ஈடுபடவேண்டும். விலங்குவிசர் நோயுடைய நாயை, அல்லது அறிகுறியுடன் காணப்படும் நாய்களை இனங்கண்டு கொல்லுதல் வேண்டும், மூன்று மாதத்திற்கு மேலான சகல வளர்ப்பு நாய்களும் (விலங்கு விசர் தடை ஊசிமருந் தை A.R.V.பெற்றுக் கொள்ள வேண்டும், பெண்நாய்களின் இனப் பெருக்கத்தை தவிர்க்க கருத்தடைச் சத்திரசிகிச்சை, 6 மாத காலத்திற்கொரு முறை கர்ப்பத் தடைஊசி மருந்தை ஏற்றுதல், நாய்க்குட்டிகளை பொது இடங்களில் விட்டுச் செல்வதைத் தவிர்த்தல், தெரிந்தவர்களின் வீட்டிலிருந்து குட்டிகளைப் பெறுதல், விலங்கு விசர் நோய்த் தடுப்பு சார் பான தரமான திட்டங்களைஉருவாக்கி பல்வேறு திணைக்களங்களை ஒருங்கி ணைந்து நடைமுறைப்படுத்தி தொடர்ந்து கண்காணித் தல், வருங்காலங்களில் வாயினூடாக கொடுக்கப்படும் வக்சீன் மருந்துகளை (ORAL LIVE VACCINATION) ஊக்குவித் தல், பல்வேறு தொலைத் தொடர்பு சாதனங் கள் மூலம், பாடசாலை சனசமூக நிலையங் கள் மூலம் விலங்கு விசர் நோய் தொடர்பான சுகாதார வழிப்புணர்வை ஏற்ப டுத்தல். நாய் கடித்கால் ஊசி போட்டுக் கொள்ளலாம் எனும் மனநிலை மாறவேண்டும். மாறாக நாயி னால் கடியுறும் சந்தர்பங்களை குறைக்கும் நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும் (கட்டி வளர்த்தல், கூண்டில் வளர்த்தல்)

வை.பிரேமகுமார்
(முன்னாள் கொழும்பு
தேசியவைத்தியசாலைப்
பொதுச்சுகாதாரப் பரிசோதகர்)

# சுவரொட்டிப் போட்டியும் கண்காட்சியும்

அரசாங்கம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு அமைய சர்வதேச ஊழல் ஒழிப்பு தேசிய குழுவால் ஊழல் ஒழிப்பு சர்வதேச தினத்தை நினைவு கூரும்முகமாக பாடசாலை மற்றும் திறந்த மட்டத்திலான சுவரொட்டி போட்டியும் கண் காட்சியும் டிசம்பர் மாதம் 9ஆம் திகதி நடாத்தப் படவுள்ளது. இதற்கு அமைய மேற்படி போட்டி யினை பின்வரும் நிபந்தனைகளின் அடிப் படையில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட் டுள்ளதாக யாழ்.பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ அறிவித்துள்ளார்.

போட்டிகளுக்கான தொனிப்பொருள்
"தரமான அரச சேவைக்காக மக்களின் உரிமையைப் பாதுகாப்போம்"

பொதுவான நிபந்தனைகள்

- சுவரொட்டியின் அளவு (17" X22") ஆக இருக்கவேண்டும் என்பதுடன் 1/2 அங்குலம் அளவிலான இட எல்லைகள் (Margine) சுவரொட்டியைசுற்றிவிடப்பட்டிருத்தல்வேண்டும்.
- இதற்காக Gsm -160-200 க்கு இடையி லான பொருத்தமான கடதாசியைப் பயன்படுத் துதல்வேண்டும். (Art Board or Bristol Board)
- முன்வைக்கப்படும் சுவரொட்டி ஆக் கங்களுக்காக ஏதேனும் வர்ணக் கலவையை பயன்படுத்தலாம்.
- மேற்படி தொனிப்பொருளுக்கு ஏற்புடை யதான தலைப்புக்களை ஆக்கம் செய்து சுவரொட்டியில் உள்ளடக்கலாம். அது 10 சொற்களுக்கு வரையறைப்படுத்தியிருத்தல் வேண்டும் என்பதுடன் எந்தவொரு மொழி யிலும் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) தெளி வாக இருத்தல்வேண்டும்.
- எல்லா ஆக்கங்களும் சுய ஆக்கங்கள் என கீழ் குறிப்பிட்டுள்ளவாறு உறுதிப்படுத் தல் வேண்டும்.

பாடசாலை மட்டம்:- வகுப்பாசிரியர், அதிபர் ஆகியோரின் கையொப்பத்துடன் பாடசாலை முத்திரை பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

திறந்த மட்டம்:- உரிய பிரிவு கிராம அலுவலர்கள்/பிரதேச செயலாளர்அல்லது அரசாங்க நிறுவனமொன்றில் பணியாற்று பவராக இருந்தால் நிறுவனத்தலைவர் மற்றும் அவருக்கு அடுத்தபடியாகவுள்ள பதவிநிலை அலுவலரின் சான்றுதல் உறுதிப்படுத்தலா னது சுவரொட்டியின் பின்பக்கத்தின் வலது பக்க மேல்மூலையில் குறித்தல் வேண்டும் என்பதுடன் உரிய உத்தியோகபூர்வ முத்திரை யுடன் இருத்தல் வேண்டும்.

இப் போட்டி தொடர்பான ஆக்கங்கள் யாவும் ஒக்டோபர் 10 ஆம்திகதிக்கு முன்னர் யாழ்ப்பாண பிரதேசசெயலக மனிதவள அபிவி ருத்தி உதவியாளரிடம் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் கேட்டுக்கொள்கின்றார். ஓ

# சமய அறிவு விருத்திப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தாவடி தெற்கு ஸ்ரீ வட பத்திர காளி அம்மன் ஆலயத்தில் கேதார கௌரி விரத பூஜைகள் எதிர்வரும் 9ஆம்திகதி முதல் 28 ஆம்திகதி வரை பகல் 11 மணிமுதல் 1 மணிவரை நடைபெறவுள்ளது.

இவ்விரத வழிபாட்டை முன்னிட்டு தரம் 6 தொடக்கம் 10 வரையான மாணவர்களுக்கு சமய அறிவுவிருத்திப் பரீட்சை ஒக்டோபர் 14ஆம்திகதி செவ்வாய்க்கிழமை ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைகள்தரம் 10மாணவர்களுக்கு காலை 8.30 மணிக்கும், தரம் 6மாண வர்களுக்கு காலை 9 மணிக்கும், தரம் 7மாணவர்களுக்கு காலை 9.30 மணிக்கும், தரம் 8 மாணவர்களுக்கு மாலை 3மணிக் கும், தரம் 9 மாணவர்களுக்கு மாலை 3.30 மணிக்கும் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சை அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை ஆலயத்தில் பெற்று பூரணப் படுத்தி பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத் தப்பட்டு ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன் ஆலயத்தில் சமர்ப்பிக்கப்பட வேண் டும். ஓ

# கலைநிலா அரங்கு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் நடத்தும் மாதாந்த நிகழ்வான கலை நிலா அரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது ஆரம்ப நிகழ்வாக, வன்னி யில் துன்புறும் மக்களுக்காக பிரார்த்திக்கும் பஜனை வழிபாடு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெறும். கலை நிகழ்வுகளில் கலைத்தூது அழகியல் கல்லூரியின் நடன, சங்கீத, மிருதங்க மாணவர்களின் அளிக்கைகளுடன் யோகா அளிக்கையும் இடம்பெறவுள்ளதுடன், சிறப்பு நிகழ்வாக பாஷையூர் வளர்பிறை நாடக மன்றம் வழங்கும் "முத்தா மாணிக்கமா" என்னும் தென்மோடி நாட்டுக்கூத்தும் மேடை யேற்றப்படவுள்ளது. ஓ

இவ் உலகில் கடமைப் பாதையே – மறுஉலகில் சொர்க்கத்தின் பாதை.

– இஸ்ரேல்

வலம்புரி

## புத்திஜீவிகள் மௌனம் கலைத்து யுத்தத்தை நிறுத்த வேண்டும்

நாடு இப்போது போரின் கொடூரத்தில் சிக்குண்டுள்ளது. வன்னிப் பெருநிலப் பரப்பில் இடம்பெறும் யுத்தத்தின் கொடூரம் சொல்லுந்தரமன்று.

வன்னி மீது நடத்தப்படும் போர் முறைமைகள் அனைத்தும் பொதுமக்களையும் வன்னிப் பெருநிலப்பரப்பின் வளங்களையும் அழிப்பதாகவே அமைகின்றன.

விமானக் குண்டுத் தாக்குதல், பல்குழல் தாக்குதல்களில் பொதுமக்கள் பலியாகும் நிட்டூரத்தைத் தடுக்கவே முடியாதா? ஐ.நா. சபை, சர்வதேச அமைப்புக்கள் எனப் பல இருந்தும் இலங்கை மண்ணில் தமிழ் மக்கள் படும் அவலத்தை நீக்கவே முடியவில்லையா? என்ற கேள்விகள் எழுவது நியாயமானதே.

கெடுகாலம் பிடித்ததுபோல் ஆட்சிப் பீடம் போரில் முனைப்புக் காட்டுகின்றது. அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய நேரத்தில் அரசு அவர்களை இம்மியும் கருத்தில் எடுக்காது போர் புரிவது தர்மமன்று.

எனவே இது விடயத்தில் சிங்களவர்கள், தமிழர், முஸ்லிம் என எத்தரப்பினர் மௌனம் சாதித்தாலும் அதன் விளைவு பாரதூரமானதாகவே அமையும்.

எனவே யுத்தத்தை நிறுத்த சிங்கள, தமிழ், முஸ்லிம் புத்திஜீவிகள் முன்வர வேண்டும். அறியாமையால் இடம்பெறும் யுத்தத்தை நிறுத்துவதற்கான முனைப்பு நடவடிக்கைகளை எடுக்கும் தார்மீகப் பொறுப்பு புத்திஜீவிகளுக்கேயுண்டு.

அதிலும் சிங்களப் புத்திஜீவிகள் இது விடயத்தில் அதீத அக்கறை கொள்ள வேண்டும். ஏனெனில் வன்னி மீது நடத்தப்படும் யுத்தம் என்புது வன்னியை மீட்டெடுப்பதுடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. மாறாக வன்னி மீதான போர் ஓர் இனத்தின் அழிவுடன் சம்பந்தப்பட்டது.

எனவே நடைபெறும் யுத்தம் இலங்கையைப் பேரவலத்திற்குள் கொண்டு செல்லும். எதிர்கால வரலாறு சிங்கள பௌத்தத்திற்கு எதிரானதாக அமையும்.

அப்போது சிங்களப் புத்திஜீவிகள் ஒருதலைப் பட்சமாக நடந்து கொண்டார்கள், அவர்கள் யுத்தத்தை முடிபுறுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற பழிச்சொல்லுக்கு ஆளாவார்கள்.

எனவே வன்னியில் இடம்பெறும் யுத்தத்தை முடிபுக்குக் கொண்டு வர தென்னிலங்கைப் புத்திஜீவிகள் குழுமமாக முன்வர வேண்டும்.


அவர்கள் தமிழ்,முஸ்லிம் புத்திஜீவிகளைத் திரட்டி யுத்தத்தின் கோரத்தை வன்னியில் தமிழ் மக்கள் படும் அவலத்தைத் தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துக் கூறுவதுடன் அரசுக்கும் ஆலோசனை வழங்கி யுத்தத்தை நிறுத்த வேண்டும்.

இது கற்றறிந்தார் செய்யும் முக்கிய பணியாகும்.

# சீரடி பாபாவே சத்யசாய்யி ப்பாபா!

## இன்று அவரது அவதார தினமாகும்

இன்று கலியுகம் விரிந்து நடைபோட்ட வண்ணம் இருக்கின்றது. மனிதனால் செய்யப்படும் தாங்க முடியாத பாவங்கள், எவ்வாறு தனது பொறுமையை மிஞ்சுவது என்ற எண்ணக் கருவே பூமாதேவியால் முன்வைக்கப்படுகின்றது. படைப்பு என்பது யாரோ ஒருவரால் தான் இயக்கப்படுகிறது. இப் பிரபஞ்சத்தைப் படைத்து இயங்க வைப்பது என்பது இலேசான



விடயமல்ல. இதற்கெல் லாம் பரந்த தெய்வம் ஒன்று இருத்தல் வேண்டும்; இருக்கின்றது. மனிதன், 'அன்பே கடவுள்' என்பதனை உணரச் செய்வதற்காக மனிதர்கள் மத்தியில் மனிதனாக தெய்வமே வந்து அவதரிக்கிறது. அவ்வாறு அவ தரித்த தெய்வமே சீரடி சாயி பாபா .

பகவான் சீரடி பாபா வின் சிறுபராயம் பற்றி 1990 ஆம் ஆண்டு செப் ரம்பர் 28 ஆம் திகதி பகவான் சத்யசாயி அறிவிக்கும் வரை எவருமே அறிந்திருக்கவில்லை. ஒரு அவதார புருசரால்தான் இன்னொரு அவதாரபுருசரை அறிய முடியும். சீரடி சாயி வட இந்தியாவிலுள்ள காசியில் பத்திரி எனும் கிராமத்தில் கங்கா பாபா – தேவகிரி அம்மையாருக்கும் மூன்றாவது மகனாக அவதரித்தார். பிள்ளைச் செல்வம் வேண்டி இறைவனிடம் துதித்த அவர்களிடம்இறைவனே, 'உங்களுக்கு மூன்றாவது மகனாக பிறப்பேன்' எனவருளினார். சீரடி பாபா தனது சிறுவயது முதல் ஒரு முஸ்லீம் தனவந்தரிடமே வளர்ந்து வந்தார். இளவயதிலேயே சீரடிக்கு வந்து தனது இறுதிக்காலம் வரை சீரடியிலேயே இருந்தார். அவரை எல்லோரும் சாயி பாபா என்றே அழைத்தனர். மக்களின் துன்பங்களை தீர்த்து ஆன்மீக வழி காட்டியாகவும் இருந்தார். சீரடி சாயியின் கடைசிக்காலம் நெருங்கும் போது அவருக்கு நெருக்கமான அப்துல்லா என்பவரிடம் தான் இவ் உடலை விட்டு நீங்கினால் கவலைப்பட வேண்டாம் என்றும் தான் மீண்டும் அவதாரம் செய்து அவருக்கு தரிசனம் தருவதாகவும் அருளினார். உலகை விட்டு நீங்கி எட்டு வருட காலத்துக்கு பின் மாதராஸ்டிரத்தில் அவதாரம் எடுப்பேன் என்றும் சத்யம் என்ற பெயரில் அறியப்படுவேன் எனறார். அவரே பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா.

சத்ய சாயி பகவான் அருளும் போது சீரடிசாயி என்ற எனது முதல் அவதாரம் தெய்வீகத்தைப் பற்றி அறிவுரைகளையும், தற்போதையை சத்ய சாயியின் நோக்கம் தெய்வீகத்தை பரிசாக அளிப்பது, வரவிருக்கும் அவதாரமான பிரேம சயி தெய்வீகத்தை கற்றுத் தருவார் என்றும் அருளினார்.

திருமதி சாராதாதேவி அம்மையார் சீரடி பாபாவின் தீவிர பக்தை. இவர் பாபாவிடம் தனக்கு சக்தி வாய்ந்த உபதேசம் செய்யும்படி வேண்டினார். அதற்கு பாபா, குழந்தாய், நான் மீண்டும் ஆந்திராப் பக்கம் பிறவி எடுப்பேன். அப்போது என் பெயர் சத்யம் என்றுதான் இருக்கும். இதனை ஒரு வரிடமும் சொல்ல வேண்டாம் என கேட்டுக் கொண்டார். இதன் பின் 1918 ஆம் ஆண்டு ஒக்டோபர் 15 ஆம் திகதி தனது உடலை நீத்தார். 20 வருடங்கள் கடந்தன. சாரதா அம்மையார் பாபாவின் பெயரில் தர்ம ஆச்சிரமம் நடாத்தி வந்தார். கிருஷ்ண கதை சொல்லி வரும் வருமானத்திலேயே இதனை நடாத்தி வந்தார். இவ்வாறு இருக்கும் போது உரவக் கொண்டா எனும் இடத்தில் அதிசயமான சிறுவன் இருக்கிறான் என்றும் சத்யம் அவர் பெயர் என்றும் அறிந்து கொண்டார். அவரைக்காண சத்யம் வீட்டுக்குச் சென்றார். சத்யம் அவரைப் பார்த்து சீரடி பாபா எவ்வாறு அழைத்தாரோ அதே போல கூறி அழைத்தார். அத்தோடு நீ எனக்கு 16 ரூபாய் தரவேண்டும் நினைவிருக்கிறதா எனக் கேட்டார். சாரதா தேவி குழப்பமடைந்தார். நீ என் பெயரில் நாற்பது ரூபாய் வசூலித்தாய் சீரடிக்கு அனுப்புவதற்கு. ஆனால் இருபத்து நான்கு ரூபாய்தான் பலராம் மூலம் அனுப்பினாய். மிகுதி பதினாறு ரூபாய் தரவேண்டும் தானே' என்றார். 'நான் உனக் கிதை நினைவுபடுத்தியது நான் சீரடி பாபாதான் என்பதை உறுதிப்படுத்தவே. சாரதா அம்மையார் பக வானின் பொற்பதங்களில் வீழ்ந்தார். சீரடிபாபாவே சத்ய சாயி பாபா.

ஜெய் சாயிராம்.

யாதவன்

# பயங்கரவாதம் முப்படையினரின் வெற்றிகளால் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது

## பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டை ஆட்டிப்படைத்துக்கொண்டிருந்த பயங்கரவாதம் தற்போது இறுதிக் கட்டத்தை நெருங்கிக்கொண்டிருக்கின்றது. எனவே எமது தாயகப் பூமியை சுதந்திர பூமியாக மீட்டெடுப்பதற்கு படையினர் நீண்ட காலத்தை செலவழிக்கப் போவதில்லை என பிரதமர் ரட்ணசிறி விக்ரம நாயக்க தெரிவித்தார்.

2008ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு சேவையினரின் 4ஆவது விளையாட்டு விழாவில் இறுதி நிகழ்வு கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய பிரதமர் மேலும் கூறியதாவது,

நாம் அனைவரும் தாய் மண்ணை நேசிக்கின்றவர்கள் என்ற வகையில் பயங்கரவாதத்துக்கு எதிராக போராடிக்கொண்டிருக்கும் படையினருக்கு ஆதரவாளர்களாகவும் இருக்க வேண்டும். பொது மக்களின் ஆதரவினைப் பெற்றிருக்கின்ற படையினர் இந் நாட்டுக்காக போராடுபவர்களாகவும் எமது தாயக பூமியை மீட்டெடுத்து சுதந்திர பூமியாக மாற்றுபவர்களாகவும் இருக்கின்றனர்.

பயங்கரவாதம் நோயாக பரவியுள்ளது. அந்த நோய் எந்த ரூபத்தில் வந்தாலும் தகுந்த மருந்து கொடுக்கப்பட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் கொள்ளையாகும்.

எமது நாட்டை பீடித்துக்கொண்டிருக்கின்ற பயங்கரவாதம் தற்போது முப்படையினரின் வெற்றிகளால் இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கின்றது. எத்தனை தடைகள் வந்தாலும் படையினரின் இலக்குகள் பின்னடையப் போவதில்லை.

எமது தாயக பூமியை மீட்டு வடக்கிலும் சிங்கக் கொடியை ஏந்தி வலம் வருவதற்கு எமது படையினர் நீண்ட நாட்களை எடுத்துக்கொள்ளப்போவதில்லை.

மருந்துக்குக் கூட புலிப் பயங்கரவாதிகளை காண முடியாத வகையில் படையினரின் செயற்பாடுகள் வரலாற்று வெற்றியைத் தரப் போகின்றன என்றார்.

ஓ

# சொல்லிலும் செயலிலும் நேர்மை

ஒரு மனிதனுக்கு உயர்வைக் கொடுப்பது பணமோ, அறிவோ, செல்வாக்கோ அல்ல. மாறாக அவனின சொல்லிலும், செயலிலும் காணப்படும் நேர்மை, உண்மை, பக்தி, இதையே பெரியவர்கள் சொல் சுத்தம், செயல் சுத்தம் என்பர். வண்டி ஓட சக்கரங்கள் இரண்டு மட்டும் வேண்டும், அந்த இரண்டில் ஒன்று சிறிய தென்றால் எந்த வண்டி ஓடும் என்று கவிஞன் பாடுதல் போல, ஒரு மனிதனின் சீரான, உயர்வான வாழ்விற்கு சொல்லும், செயலும் இரண்டு சக்கரங்கள் போல ஒன்றாக செயல்பட வேண்டும். இதுவே அவன் வாழ்விற்கு உயர்வைக் கொடுக்கும்.

மனிதர்களில் இரண்டு வகையுண்டு;


சொல்விரர்கள் மக்களுக்கு அதிக கவர்ச்சியான வாக்குறிதிகளை அள்ளி இறைத்து தாங்கள் நேர்மையானவர்கள், இரக்கம் உள்ளவர்கள், உண்மை உள்ளவர்கள் என்று காட்டிக் கொள்வர். ஆனால் வாழ்வில் செயலில் நேர்மாறாக இருப்

பரமபிதா காட்டிய பாதை

பர். இவர்கள் பசசோந்திகள், கபடு உள்ளவர்கள், இவர்களை நம்ப முடியாது. இவர்களைத் தான் இயேசு, வெளிவேடக்காரர், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் என்று சாடுகின்றார்.

### செயல்வீரர்கள்

இவர்களுக்கு சொல்லத் தெரியாது. பேசினாலும் குறைவாகப் பேசுவார்கள். இவர்களுடைய பேச்சு கரடு முரடாக, கசப்பாக இருக்கும். ஆனால் உள்ளத்தில் இவர்கள் குழுந்தைகள். செயலில் இவர்கள் வல்லவர்கள். இவர்கள் சமூகத்தில் தாழ்ந்த நிலையில் இருப்பார்கள். பார்க்க அழகாகவோ, தகுதியில் உயர்வாகவோ இருக்க மாட்டார்கள். ஆனால் கள்ளங்கபட மற்றவர்கள், சூதுவாது அறியாதவர்கள், எதார்த்தவாதிகள். முதலில் எதிர்த்து எழுவர் பின் ஏற்றுக் கொண்டு செயலில் இறங்குவர்.



இவர்களைத் தான் ஆண்டவர் இயேசு பேறுபெற்றவர்கள் என்று மலைப் பொழிவில் வாழ்த்துகின்றார்.

'நன்கு சிந்திப்பது நல்லது, அதைவிட நன்கு செயல்படுவது தெய்வீகமானது' என்று ஹோரேஸ் அவர்கள் கூறுகிறார்கள்.

எத்தனை நாளைக்கு சொல்லில்பிறரை ஏமாற்ற முடியும்? ஏமாற்ற நினைக் கிற வர்களே ஏமாந்து போவர்கள், எனவே , சொல்வதையே செய் வோம், செய்வதையே சொல்வோம்– அதைத்தான் நம்பெரு மான் இயேசு செய்தார்.

ஜோன் ரொபேர்ட்

# மன்மோகன் சிங் பிரதமரானது தமிழ் மக்களின் துரதிருஷ்டமே

எங்கள் சொந்த மண்ணில் சகோதரர்கள் இருபது கிலோ மீற்றருக்கு அப்பால் அநியாயமாக கொல்லப்படுவதை கண்டு நாங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதற்காக நாங்கள் இங்கே துப்பாக்கியை ஏந்தவும் இயலாது. அதனால் அமைதி வழியில் காந்தி அடிகள் பிறந்த நாளில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தவுள்ளோம்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நான் நன்கறிவேன். அவர் இதுபோன்ற விடயங்களில் அக்கறை காட்டக்கூடிய அரசியல் வாதியல்ல. மனித உயிர்களின் மரணம் குறித்து அதிகம் கவலையடையமாட்டார். அவர் பிரதமராகக் கிடைத்தது நாங்கள் செய்த துரதிருஷ்டம் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயலாளர் தா. பாண்டியன் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையிலேயே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு ஹைதராபாத்தில் நடை பெற்ற போது இலங்கையில்நிலவி வரும் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான ஒரு சுமு கமான தீர்வு எட்டப்பட வேண் டும் என்று தீர் மானமே நிறை வேற்றப்பட்டது. இது இன்று நேற்று தோன்றிய பிரச்சினை அல்ல. அரை நூற்றாண்டுகாலத்திற்கு மேலாக அந்த தீவு அலைக்கழிக்கப்படுகிறது. அதில் பாதிக்கப்பட்டவர்கள் யார் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதைவிட அந்த நாடு முன்னேற்றத்தை இழந்து நிற்கிறது. ஆட்சியாளர்களுக்கு அதனால் தொல்லை உண்டு .ஆளப்படுகிற மக்களுக்கும் அதனால் இழப்புக்கள் அளவிடமுடியாத அளவிற்கு ஏற்பட்டிருக்கிறது. இரண்டு மூன்று சந்ததிகள் இயல்பான வாழ்க்கையை இழந்துவிட்டன வீட்டை இழந்து ,நாட்டைஇழந்து அகதிகளாக வேறு நாடுகளுக்கு புலம் பெயர்ந்து வாழ்வதும் அங்கே அவர்கள் பல்வேறு அலைக்கழிப்பிற்கு ஆளாவது எல்லோரும் அறிந்த செய்தி. இதற்கிடையில் அங்கே எஞ்சி நின்ற தமிழ் மொழி பேசுகிற மக்கள் தங்களுக்கு என ஒரு தனி மாநிலம் வேண்டும். உரிமைகள் வேண்டும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்ற பொதுவான மனிதாபிமான அடிப்படையிலான கோரிக்கைகளை முன் வைத்து தந்தை செல்வா காலத்தில் இருந்து போராடி வருகிறார்கள். காந்தி வழியில் போராடினார்கள், அமைதி வழியில் போராடினார்கள் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார்கள் ஆனால் எதிலும் தீர்வு மட்டும் வரவில்லை.

இதனால் பொறுமையிழந்த இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி போராட தொடங்கினார்கள். ஆயுதம் ஏந்தி போராடுவதை நாம் அங்கீகரிக்கிறோமா இல்லையா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டியதல்ல. அந்த நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டார்கள் என்பது தான் நமது மதிப்பீடு.

வேறு வழியே இல்லை. அமிர்தலிங்கம் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் வென்றார்கள். வெற்றி பெற்றதை அங்கீகரித்து அவர்களின் கோரிக்கைகளுக்கு அமைதி வழியில் தீர்வு காணப்பட்டிருந்தால் இன்று இப்பிரச்சினை எழுந்திருக்காது.

இனப்பிரச்சினைக்கான தீர்வை இலங்கை அரசு தான் முன் வைக்க வேண்டும். எங்கள் தமிழ் மக்கள் இலங்கையில் கொல்லப்படுகிறார்களேஎன்று கொதித்தெழுந்து தமிழக மக்கள் போராடியதன் அடிப்படையில் முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தி விரும்பினாரோ, விரும்ப வில்லையோ அவரை நாங்கள் நிர்ப்பந்தித்து அர சியல் தீர்வு காண அனுப்பி வைத்தோம்.

அவரும் முயற்சி எடுத்து அந்நாட்டு தலைவர்களுடன் பேசி ஓர் ஒப்பந்தத்தை உரு வாக்கினார். அதில் இரு சாரருக்கும் முழுத்திருப்தியில்லை. ஆனால் ஏற்றுக்கொண்டதை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப் படுத்தியதா என்பது இன்றைக்கு வரலாற்றில் ஒரு பெரிய கேள்விக்குறியாக நிற்கிறது.

அதன் பிறகு ஏற்பட்ட துயர நிகழ்ச்சிகளையெல்லாம் நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை. ஏனென்றால் அது மேலும் புண்ணை ஆழப்படுத்தும். இரு பக்கங்களிலும் தவறுகள் நிகழ்ந்திருக்கலாம்.

ஆனால் உரிமைக்காகப் பேராடுகிற மக்கள் கோரிக்கைகளை வைப்பதோ போராடும் முறைகளோ வேறு. ஆனால் ஒரு நாட்டின் மக்களை ஆளுகின்ற அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கை மற்றும் நடைமுறை என்பது வேறு. இவ்விடயத்தில் ஒரு அரசாங்கத்தின் பொறுப்பு அதிகம். அதுவும் இந்த நாகரீக உலகில் ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள அரசு மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு என்ன வழி என்று பார்க்க வேண்டும்.

இங்கு நூற்றுக்கு நூறு தமிழர்களும் ஆயுதம் ஏந்தி நிற்கவில்லை. அவர்கள் சார்பில் சிலர் போராடுகிறார்கள். அரசு ஆயுதம் ஏந்திய இராணுவத்தை அனுப்புவது விமானம் மூலம் குடிமக்கள் மீது குண்டு போடுவது என்பது கண்டும் கேட்டிராத போர் முனை அதுவும் ஒரு நாள் அல்ல, இரண்டு நாள் அல்ல இரண்டு ஆண்டு காலமாக தொடர்ந்து விமானங்கள் மூலம் குண்டு வீச்சு நடை பெற்றிருக்கிறது.

## 31 மாநிலங்களைக் கொண்ட இந்தியாவை பார்த்து இலங்கை கற்றுக்கொள்ளவேண்டும்

விமானத்தாக்குதல் நடத்துகிற போது தங்களுக்கு எதிராக துப்பாக்கி ஏந்தி போராடு கிறவர்களை மட்டும் குறி பார்த்து குண்டு வீச இயலுமா? இயலாது அதனை ஒட்டி வாழ்கிற நிரபராதிகளின் தலைகளிலும் குண்டுவிழும். இவ்வகையில் இங்கு நாள் தோறும் அப்பாவிகள் கொல்லப்படுகிறார்கள். தப்பியவர்கள் நாள் தோறும் அகதிகளாக தமிழகம் நோக்கி வருகிறார்கள்.

இந்த கொடுமைகள் அனைத்தையும் பார்த்துக்கொண்டு அமைதியாக கட்சியில் இருக்க இயலாது. கொல்லப்படுவது தடுக்கப் பட

**இலங்கையில் அரை நூற்றாண்டிற்கு மேலாக நீடித்து வரும் இனப்பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி எதிர்வரும் 2ஆம் திகதி சென்னையில் உண்ணா விரத போராட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்கட்சி அழைப்பு விடுத்திருக்கிறது இந்நிலையில் போராட்டத்திற்கான அவசியம் குறித்து அக்கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியின் தொகுப்பு**

வேண்டும். நிறுத்தப்படவேண்டும் அமைதி வழியில் தீர்வு காண விரும்புகிறது என்றால் அந்த அரசு இந்தெந்த அடிப்படையில் அரசியல் தீர்வு காண விரும்புகிறேன் இதனை ஏற்க மறுத்து அவர்கள் துப்பாக்கியை ஏந்தி இருக்கிறார்கள் இதுநியாயமா ? என்று கேட்டால் அது நியாயமான தீர்வாக இருக்குமே ஆனால் நாங்களும் அரசோடு சேர்ந்து துப்பாக்கியை கீழே போடு என்று அந்த தமிழனோடு வாதாடுவோம். அவன் போட மறுத்தால் அவனை எதிர்த்து இவர்களுடன் சேர்ந்து போராடவும் தயங்க மாட்டோம். செய்தார்களா? இந்திய அரசு கேட்டும் கூட அவர்கள் எந்த விதமான தீர்வுத் திட்டத்தையும் முன் வைக்கவில்லை.

இப்போதும் காலம் தாழ்ந்துவிடவில்லை. இப்போதாவது இலங்கை அரசு ஒரு திட்டத்தை பகிரங்கமாக உலகறிய அறிவிக்கட்டும். இந்த வகையில் நாங்கள் ஒரு மா நிலத்தை அமைக்க இருக்கிறோம். அதற்கு இந்தந்த அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. உரிமைகள் வழங்கப்படுகின்றன.

இதற்கு மேல் அதிகாரங்களை வழங்க இயலாது என்று அவர்கள் என்ன எண்ணுகிறார்களோ அதை உலகிற்கு அறிவிக்கட்டும் விடுதலைப் புலிகளுக்காகவோ அல்லது மற்றவர்களுக்காகவோ அறிவிக்க வேண்டாம். உலக மக்களுக்காக அறிவிக்கட்டும். அதன் பிறகு உலக மக்கள் தீர்ப்பளிக்கட்டும் குறிப்பாக இந்தியா, அண்மையில் இருக்கும் தமிழகத்து மக்கள்.

ஏனெனில் இதனால் நேரடியாக பாதிக்கப்படுபவர்கள் அதன் உடன் தமிழர்கள் மீது அக் கறையுள்ளவர்கள் .

எனவே முதலில் திட்டத்தை அறிவிக்க வேண்டும். அதை விடுத்து விமானம் மூலம் தொடர்ந்து குண்டு வீசி அனைவரை யும் அழித்த பிறகு தான் அமைதி பேச்சு வார்த்தை என்றால் அழிப்பதில் ஈடுபட்டிருக்கிறாயா அல்லது பிரச்சினையை தீர்ப்பதில் ஈடுபட்டிருக்கிறாயா என்ற வினா இயல்பாகவே எழுகிறது.

எங்கள் சொந்த சகோதரர்கள் இருபது கிலோ மீற்றருக்கு அப்பால் அநியாயமாகக் கொல்லப்படுவதை கண்டு நாங்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. அதற்காக நாங்கள் இங்கே துப்பாக்கி ஏந்தவும் இயலாது. அதனால் அமைதி வழியில் காந்தி அடிகள் பிறந்த நாளில் தமிழக மக்கள் அனை வரையும் திரட்டி கம்யூனிஸ்ட்கட்சி மட்டுமல்ல, திரட்டுவது மட்டும்தான் கம்யூனிஸ்ட் கட்சி . ஆனால் அனைத்துக்கட்சிகளின் ஆதரவும் குவிந்து கொண்டிருக்கிறது.

தமிழக மக்கள் அனைவரும் 20 வருடங்களுக்கு முன்னாள் இலங்கைத்தமிழர்கள் மீது எந்த அளவிற்கு அனுதாபத்தை காட்டினார்களோ அதே அளவிற்கு அனுதாபத்தை நாங்கள் மீண்டும் புதுப்பித்திருக்கிறோம். இன்று தமிழகத்தையே தட்டி எழுப்பியிருக்கிறோம்.

இது அரசியல் பிரச்சினை அல்ல. சகோதரருடைய உயிரை காப்பாற்ற வேண்டிய பிரச்சினை. கட்சிப்பேதங்களை தேர்தல் காலங்களில் பார்த்துக்கொள்ளலாம் இது வாக்குக் கோருவதற்கான காலம் அல்ல. வாழ்க்கையை காப்பாற்றுவதற்கான காலம்.

இதனால் சென்னையில் நானும் கட்சியின் பாராளுமன்ற சட்ட மன்ற உறுப்பினர்களும் நிர்வாகிகளும் உண்ணா விரதப்போராட்டத்தில் பங்கெடுக்கப்போகிறோம்.

தோழமை கட்சியினரும் பங்கேற்க இருக்கிறார்கள். கலை உலகத்தினரும் பங்கேற்க சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள். எழுத்தாளர்கள் , ஆசிரியர்கள், மாணவர்கள் என நாங்கள் எதிர்பார்த்ததைவிட அணி அணியாக ஆதரவு பெருகிக்கொண்டே செல்கிறது. எங்கள் ஆதரவு தமிழர்களுக்கு மற்றும் மனித குல உயிர்களை பாதுகாப்பதற்கே தவிர சில குழுக்களுக்காக அல்ல. இப்போராட்டத்தின் மூலம் இப்பிரச்சினையில் தீர்வுகாண திட்டத்தை இலங்கை அரசிடம் இருந்து கோரிப் பெறுகிறாயா? அல்லது தமிழகத்து மக்கள் போராடித்தான் பெறவேண்டுமா என்று மத்திய அரசை நாங்கள் வற்புறுத்தவுள்ளோம். இவ்விடயத்தில் மத்திய அரசு எங்களுக்கு துணையாக இல்லை. ஆயுதங்களை மட்டுமல்ல இலங்கை அரசிற்கு மருந்து கூட கொடுக்கக்கூடாது.

ஏனெனில் அது மக்களை கொல்லுகின்ற அரசாக இருக்கிறது. அவதிப் பட்டு அகதிகளாக இருக்கிற மக்களுக்கு மட் டும் அது சிங்கள அகதிகளாக இருந்தாலும் சரிஉணவு மருந்து உடையினை இந்திய அரசு அனுப்ப வேண்டும்.

அது நூறு கோடி மக்களுடைய தார்மீகக் கடமை. இதனையும் நாங்கள் வலி யுறுத்துகிறோம். இதற்காகத்தான் ஒக்டோபர் 2ஆம் திகதி உண்ணா விரதப்போராட்டம் நடை பெறுகிறது.

இராணுவ வீரர்களையும் அனுப்பியிருக்கிறார்கள் . ராடர் கருவிகளையும் அனுப்பியிருக்கிறார்கள் . அதில் இருவர் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பதிலிருந்தே இந்திய அரசு இதில் தெளிவான கொள்கையில் இல்லை என்றும் குழப்பமான கொள்கையினை கடைப்பிடித்து வருகின்றது என்பதும் தெளி வாகியிருக்கிறது.

எனவே இதுவும் கண்டிக்கத்தக்கதாகும். இந்திய அரசு இலங்கை அரசை மிரட்ட வேண்டும் என்றோ அல்லது படைகளை அனுப்பி அதனை கைப்பற்ற வேண்டும் என்றோ நாங்கள் என்றைக்கும சொன்னதில்லை. இப்போதும் அந்த கருத்து எங்களிடம் இல்லை. ஆனால் வரலாற்று ரீதியான ஒரு பெரும் நாடு, நட்பு நாடு, அந்த நாட்டிற்கு நன்மை செய்யக் கூடிய வகை யிலேயே இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணவேண்டும். அதற்கு உதவி



செய்யவேண்டும் .அதற்கு பதிலாக துப்பாக்கிக் குண்டு தருகிறார்கள் என்றால் அது மன்னிக்க கூடிய செயலல்ல . இந்த விடயத்தில் நாங்கள் இந்திய அரசை கண்டிக்கிறோம். இதற்கிடையே நல்லெண்ண தூதுவராக இந்திய அரசு ஒரு இராணுவ அதிகாரியை அனுப்பியதே தவறு என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சர்வதேச சமூகம் தற்போது குழம்பியிருக்கிறது. உலகெங்கிலும் உள்ள மனச்சாட்சியுடையவர்கள் தான் இதற்காக குரல் எழுப்பவேண்டுமே தவிர ஐக்கிய நாடுகள் சபையோ அல்லது மேற்கத்தேய நாடுகளோ இதில் ஆதாயம் தேடத்தான் முயற்சிக்கும். எனவே சர்வதேச சமூகத்தை நம்பவேண்டியதில்லை. அவர்களை சார்ந்து நின்று நாம் இதற்கு தீர்வு காண முயற்சிக்க தேவையில்லை .நம் தமிழ் மக்கள் இந்திய நாடு மற்றும் இலங்கை ஆகியவை இணைந்து முயன்று இந்த சிக்கலுக்கு தீர்வு காணவேண்டும்.

இலங்கையின் உள்நாட்டு அரசியல் குறித்து கருத்து தெரிவிக்க இயலாது ஆனால் புத்தனை போற்றுகின்ற , புத்தனை வணங்குகின்ற சிங்கள மக்கள் இவ்வளவு துப்பாக்கிகளைத் தூக்கிக் கொண்டு, வெறிபிடித்து அலைகிறார்கள் என்பதை பார்க்கும் போது எங்களால் சிங்களவர்களை புரிந்து கொள்ள முடியவில்லை.

இவ்விடயத்தில் முப்பத்தியொரு மாநிலங்களை கொண்டிருக்கின்ற இந்தியாவை பார்த்து இலங்கை அரசு பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். இங்கு எந்த மாநிலங்களும் தங்களுக்குள் மோதிக் கொள்ளவில்லை. எல்லாம் முன்னேற்றத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றன.

இலங்கை நாட்டிற்குள் எவ்வாறு மாநிலம் அமையவேண்டும் அதற்கு என்ன பெயர் வைக்க வேண்டும். அவர்களுக்கு எவ்வளவு அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்பதையெல்லாம் இலங்கைதமிழ மக்களும் இலங்கை அரசும் தான் சேர்ந்து தீர்மானிக்க வேண்டிய ஒன்று. இலங்கையில் சுமூகத் தீர்வு ஏற்பட வேண் டும்.

மக்கள் கொல்லப்படுவது தடுக்கப்பட வேண்டும் அதற்கு அமைதி வழியில் தீர்வு காணுங்கள் என்று தான் சொல்லுவோமே தவிர இங்கே இவர்களுக்கு இதை வழங்குங்கள் என்றால் அது உத்தரவு போடு வது போலாகும்.

அதனுடன் உள்நாட்டு விடயங்களில் தலையிடுவது போலாகிவிடும் அதனை செய்ய நாங்கள் விரும்பவில்லை. மொழியால் பிரிந்திருக்கும் நீங்கள் தனி தனி மாநிலங்களை அமைத்துக் கொண்டு முன்னேற்றத்துடன் கூடிய வாழ்வை இணைந்து வாழுங்கள் என்பது தான் எங்களின் வேண்டுகோள்.

நிவாஷன்

அங்கு என்ன நடந்தது என்ற முழுமையான தகவல் இங்கு கிடைக்க வில்லை. அதைவிட இந்திய பிரதமரை நான் நன்கறிவேன். அவர் இது போன்ற விடயங்களில் அதிக அக்கறை காட்டக்கூடிய அரசியல் வாதியல்ல. அவர் வணிகம்,வரவு,செலவு என்றிருந்தால் அதைப் பற்றி அதிகம் கவனித்திருப்பார்.

மனித உயிர்களின் மரணத்தைக் குறித்து அதிகம் கவலையடையமாட்டார். அவர் எங்களுக்கு பிரதமராக கிடைத்தது நாங்கள் செய்த துரதிருஷ்டம் என்றார்.

# கோப்பை வென்றது ஆஸி. 'ஏ' இந்திய 'ஏ' அணி பரிதாபம்

(சென்னை)

முத்தரப்பு கிரிக்கெற் இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலியா 'ஏ' இந்தியா 'ஏ' அணியை 156 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி



கோப்பை கைப்பற்றி அசத்தியது.

பஇந்தியா அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து 'ஏ' அணிகள் மோதிய முத்தரப்பு 50 ஓவர் போட்டி சென்னையில் நடந்தது. நேற்று முன்தினம் இறுதிப்போட்டியில் இந்தியா, அவுஸ்திரேலியா 'ஏ' அணிகள் மோதின. அவுஸ்திரேலிய அணியின் ஆரம்ப வீரர் ரோஞ்சி 41 பந்தில் 2 சிக்சர் 4பவுண்டரி உட்பட 75ஓட்டங்களை எடுத்தார். ஒயிற் 3 சிக்சர், ஒருபவுண்டரி உட்பட 50 ஓட்டங்களை எடுத்து வெளியேறினார். அடுத்து வோகஸ் 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருக்க அவுஸ்திரேலியா 'ஏ' அணி 50 ஓவரில் 7 விக்கெற் இழப்புக்கு 303 ஓட்டங்கள் எடுத்தது.

கடின இலக்கை விரட்டிய இந்தியா 'ஏ' அணிக்கு தினேஷ் கார்த்திக் (0) ரோபின் உத்தப்பா (14) மோசமான ஆரம்பம் தந்தனர். அடுத்து வந்த நாயர் (1) ரவி தேஜா (11) வெளியேற இந்தியா ஏ அணி 4 விக்கெற் இழப்புக்கு 33 ஓட்டங்கள் மட்டும் எடுத்து திணறியது. ரெய்னா 9ஓட்டங்களுக்கு வெளியேறினார்.

ரோகித் சர்மா மட்டும் 46 ஓட்டங்கள் எடுத்து ஆறுதல் தந்தார். யூசுப் பதான் ஒரு ஓட்டத்துடன் வெளியேறி சொதப்பினார். இந்தியா 'ஏ' அணி 32 ஓவரில் 147 ஓட்டங்களுக்கு சுருண்டது. அவுஸ்திரேலியா 'ஏ' அணி 156 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று கோப்பையைக் கைப்பற்றியது.

## இரானி கோப்பை கிரிக்கெற் ரெஸ்ட் ஒப் இந்தியா கோப்பையை வென்றது

வதோதராவில் நடந்த 5 நாள் போட்டி கொண்ட இரானிக் கோப்பை கிரிக்கெற் போட்டியில் கும்ளே தலைமையிலான ரெஸ்ட் ஒப் இந்தியா அணி சேவாக் வழி நடத்தும் ரஞ்சி சம்பியன் டில்லி அணியை 187 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கும்ளே அணி முதல் இன்னிங்ஸில் 252 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் களமிறங்கிய சேவாக்கின் டில்லி அணி முதல் இன்னிங்ஸில் 177 ஓட்டங்களைச் சேர்த்தது. இரண்டாவது இன் னிங்ஸில் ரெஸ்ட் ஒப் இந்தியா அணியின் டிராவிட் (69), தோனி (84) கை கொடுக்க 302 ஓட்டங்களை குவித்தது.

இரண்டாவது இன்னிங்ஸில் 328 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய டில்லி அணி 190 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையும் இழந்து தோல்வியடைந்தது. இறுதி வரை போராடிய ஆரம்ப துடுப்பாட்ட வீரர் காம்பீரின் (91) அரைச்சதம் வீணானது.

## உதைபந்தாட்ட வீரர்களுக்கு இதய பரிசோதனை கட்டாயம்

உதைபந்தாட்ட வீரர், வீராங்கனைகளுக்கு இதயப் பரிசோதனை நடத்துவது கட்டாயம் என சர்வதேச உதைபந்தாட்ட கூட்டமைப்பு (பீபா) அறிவித்துள்ளது.


சமீப காலமாக உதைபந்தாட்ட போட்டிகளில் விளையாடும் வீரர், வீராங்கனைகள் இதய நோய காரணமாக களத்திலேயே இறப்பது அதிகரித்து வருகிறது.

இதயம் பலவீனமானவர்கள் உதை பந்தாட்டத்தில் ஈடுபடும் போது மூச்சு திணறல் மற்றும் மாரடைப்பு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது.

இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, இஸ்ரேல், ஸ்பெயின் நாடுகளில் நடந்த கழக போட்டிகளில் பல வீரர், வீராங்கனைகள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து, சர்வதேச போட்டிகள் மட்டுமல்லாது உள்ளூர் போட்டிகள், கனிஷ்ட பிரிவு போட்டிகளில் விளையாடுபவர்களும், மருந்துவ பரிசோதனைக்குப் பின்னரே விளையாட அனுமதிக்கப்படவேண்டும் என்று பீபா வலியுறுத்தியுள்ளது.

## தேர்வுக்குழு தலைவராக ஸ்ரீகாந்த் தெரிவு



(மும்பை)

இந்திய கிரிக்கெட் தேர்வுக்குழுவின் தலைவராக இந்திய அணியின் முன்னாள் தலைவர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் தேர்வு செய்யப்பட்டுள்ளார். நேற்கு நடைபெற்ற பி.சி.சி. ஐயின் 79 ஆவது பொதுக்குழு கூட்டத்தில் இந்த முடிபு அறிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீகாந்த் தவிர ராஜா வெங்கட், சுரேந்திர பவ், நரேந்திர ஹிர்வானி மற்றும் யஸ்பல் சர்மா ஆகியோர் இந்த தேர்வு பட்டியலில் இடம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# செர்னோபில் அணு உலை விபத்தில் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு உதவும் மரியா ஷரபோவா!

டென்னிஸ் என்றவுடன் சட்டென நமது நினைவுக்கு வருபவர் ரஷ்ய புயல் மரியா ஷரபோவா. எத்தனை வீராங்கனைகள் வந்தாலும் ரசிகர்களின் மனதில் நம்பர்-1 இடத்தை பிடித்து



டென்னிஸ் உலகை தன்பக்கம் இழுத்துள்ளார். ஒருபக்கம் கவர்ச்சியான உடை, அதிரடி ஆட்டம் என ரசிகர்களை கிறங்க வைத்தாலும் இவரது மறு பக்கம் கருணையும், அடுத்தவர்களுக்கு உதவும் மனமும் கொண்டதாக இருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் வளர்ச்சி திட்டத்தின் நன்னம்பிக்கை தூதராக இருக்கும் இவர், சமீபத்தில் செர்னோபில் அணு உலை விபத்தில் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு தனது சொந்த பணத்தில் இருந்து ரூ. 70இலட்சம் வழங்கினார்.

இவர்களுக்கு இன்னும் அதிகம் உதவ வேண்டும் என்ற ஆசையில் தனது பெயரில் ஷரபோவா பவுண்டேஷன் என்ற அமைப்பை நடத்தி வருகிறார். இந்நிலையில் தற்போது செர்னோபில் நகர இளைஞர்களுக்கு இரண்டாவது முறையாக உதவ முன்வந்துள்ளார். இம்முறை இளைஞர்களின் கல்வியை உயர்த்துவதில் அதிக அக்கறை காட்டவிருக்கிறார்.

செர்னோபில் நகரில் இருக்கும் ஐந்து இளைஞர்களை தேர்வு செய்து பெலாரஸ் பல்கலைக்கழகத்தில் அவர்களுக்கு ஐந்து ஆண்டு தங்கி படிக்க புலமைப்பரிசில் வழங்க இருப்பதாக தெரிகிறது. இதற்காக சுமார் 150 இலட்சம் வரை செலவழிக்க இருக்கிறார். இது குறித்து ஷரபோவா கூறுகையில், செர்னோபில் விபத்து 1986இல் நடந்தது. அதற்கு அடுத்த ஆண்டு நான் பிறந்தேன். பின்னர் பெலாரசில் குடியேறினோம்.

செர்னோபில் பெலாரசுக்கு மிக அருகில் இருந்ததால் அணுக்கதிர் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சத்தில் எனது பெற்றோருடன் செர்பியா சென்றுவிட்டேன்.

இதனால் ஏற்பட்ட பாதிப்புகளை நன்கு அறிவேன். செர்னோபிலில் வாழ்பவர்களுக்கு என்னால் முடிந்த அளவு உதவ வேண்டும் என்பதே எனது கனவு. இங்கிருக்கும் இளைஞர்களின் கல்வி தரத்தை அதிகரிக்க முயற்சித்து வருகிறேன் என்றார்.

# அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் சச்சின் ஆடுவார்

(மும்பை)

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் கிரிக்கெட் டெஸ்டில் விளையாட சச்சின் டெண்டுல்கர் முழு உடல் தகுதி பெற்றிருப்பதாக இந்தியா கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இலங்கை தொடரின் போது காயம் காரணமாக டெண்டுல்கர் ஒரு நாள் தொடரில் இருந்து விலகி கொண்டார். பின்னர் அவருக்கு ஓய்வு தேவை என்பதால் இரானிக் கோப்பையில் இருந்தும் விலகிக் கொண்டார்.

இதனையடுத்து அவுஸ்திரேலிய தொடரில் அவர் விளையாடுவாரா என்பது கேள்விகுறியாக இருந்தது. இந்நிலையில் சச்சின் டெண்டுல்கர் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் விளையாட முழு உடல் தகுதியோடு இருப்பதாக இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

டெண்டுல்கரின் உடல் தகுதி குறித்து உடற்பயிற்சி நிபுணர் திருப்தி தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் பெங்களூரில் நடை பெறவுள்ள வீரர்களுக்கான பயிற்சி முகாமில் சச்சின் பங்கேற்கிறார். டெஸ்ட் வரலாற்றில் அதிக ஓட்டம் குவித்த லாராவின் உலக சாதனையை முறியடிக்க டெண்டுல்கருக்கு இன்னமும் 76 ஓட்டங்கள் தேவை.

# பாகிஸ்தான் போட்டிகளை டுபாயில் நடத்த ஒப்பந்தம்

பாகிஸ்தான் கிரிக்கெற் அணி விளையாடும் சர்வதேச போட்டிகளை டுபாய் விளையாட்டு நகரத்தில் நடத்த ரூ. 40 கோடிக்கு



டுபாயில் அமைக்கப்படவுள்ள விளையாட்டு நகரம்


ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

பாதுகாப்பு காரணங்களுக்காக பாகிஸ்தானில் நடக்கவிருந்த சம்பியன்ஸ் தொடர் அடுத்த ஆண்டுக்கு ஒத்தி வைக்கப்பட்டது. அங்கு சர்வதேச கிரிக்கெற் போட்டிகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பாகிஸ்தான் கிரிக்கெற் சபைக்கு கடும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதை தவிர்க்கும் வகையில் போட்டிகளை பொதுவான இடத்தில் நடத்த பாகிஸ்தான் சபை திட்டமிட்டது. டுபாய் விளையாட்டு நகரம் இந்த போட்டிகள்ள நடத்த முன் வந்துள்ளது.

இதற்காக 3 ஆண்டுகளுக்கு ரூ. 40 கோடியை பாகிஸ்தான் கிரிக்கெற் சபைக்கு வழங்க டுபாய் விளையாட்டு நகர நிர்வாகம் ஒப்புக்கொண்டுள்ளது. பாகிஸ்தான் அணி விளையாடும் சர்வதேச ஒருநாள் மற்றும் இருபது -20 போட்டிகள் இங்கு கட்டப்படவுள்ள கிரிக்கெற் அரங்கில் நடத்தப்படும்.

பாகிஸ்தான் அணி பாதுகாப்பு பிரச்சினை காரணமாக இந்த ஆண்டில் எந்த முக்கிய அணியுடனும் தனது சொந்த மண்ணில் டெஸ்ட் தொடரொன்றில் விளையாடவில்லை. அது கடைசியாக தனது சொந்த மண்ணில் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் தென்னாபிரிக்காவுடன் டெஸ்ட் தொடரொன்றில் விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதியாக பேராசிரியர் சத்தியசீலன் தெரிவு



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் ச.சத்தியசீலன் நேற்று நடைபெற்ற யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புக்கள் பீடத் தேர்தலில் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்றுப் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை துணைவேந்தராக இருந்தபோது உருவாக்கப்பட்ட உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், பேராசிரியர் க.கந்தசாமி ஆகியோரை அடுத்து நான்காவது பீடாதிபதியாக பேராசிரியர் சத்தியசீலன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பேராசிரியர் ச.சத்தியசீலன் வேலணை மத்திய கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரிகளின் பழைய மாணவராகவும் பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்று சிறப்புப் பட்டதாரியுமாவார்.

யாழ்.பல்கலைக்கழகத்திலும் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் கல்வி கற்று முதுமாணி, கலாநிதிப் பட்டங்களைப் பெற்றவர். 1974 இல் யாழ்.பல்கலைக்கழகம் ஆரம்பித்த காலத்திலிருந்து பல நிலைகளைக் கடந்து தற்போது வரலாற்றுத்துறைப் பேராசிரியராக இவர் பணியாற்றி வருகின்றார்.

இவர் எழுதிய 'இலங்கைத் தமிழர் மலேசியாவில் குடியேற்றம்' என்ற ஆய்வு நூலுக்கு மலேசிய அரசினால் விருது வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தவிர நவீன வரலாற்றில் புலமை பெற்ற இவர், இலங்கை சார்ந்த பல எழுத்தாக்கங்களை வெளியிட்டுள்ளார். இங்கிலாந்து, கனடா, மலேசியா, இந்தியா போன்ற நாடுகளுக்கும் ஆய்வு ரீதியாக இவர் சென்று வந்துள்ளார்.

500ற்கும் மேற்பட்ட முழு நேர மாணவர்களையும் பல நூறு ஆய்வு, மாணவர்களையும் கொண்ட இப் பீடத்தின் சிறப்பான இயக்கத்திற்கு இவரின் ஒத்துழைப்பைக் கல்விச் சமூகம் வேண்டி நிற்கின்றது. (ந-5)

# தேசிய மட்ட தடகளப் போட்டியில் யாழ்ப்பாண மாணவர்களுக்கு வெள்ளி,வெண்கலப் பதக்கங்கள்

(கொழும்பு)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் நேற்று நடைபெற்ற தடகளப் போட்டிகளில் யாழ்ப்பாண மாணவர்களுக்கு நீளம் பாய்தலில் வெள்ளிப் பதக்கமும் குண்டெறிதலில் வெண்கலப் பதக்கமும் கிடைத்தன.

இதில் 21 வயதுக்குட்பட்டோருக்கான நீளம் பாய்தலில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவன் குணசிங்கம் கோபிநாத் இரண்டாம் இடத்தைப் பிடித்து வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

21 வயதுக்குட்பட்டோருக்கான குண்டெறிதல் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் சண்முகசுந்தரலிங்கம் வாகீசன் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை தனதாக்கிக் கொண்டார்.

இதன் மூலம் தேசிய மட்ட தளகளப் போட்டிகளில் வட மாகாணத்திலேயே யாழ்ப்பாண மாணவர்கள் இருவர் பதக்கங்களை பதிவு செய்துள்ளனர். (ந-5)

## தமிழ் மக்களைப்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். வாராந்த சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, வன்னி மக்கள் நாளுக்கு நாள் இடத்திற்கு இடம் நகர்ந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

படையினரின் தாக்குதல்களால் மக்களுக்கு சுதந்திரமாக வாழ முடியவில்லை. உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் இந்த மக்கள் வீடுகளில் இருந்து வெளியேறி பல்வேறு இடங்களில் அகதிகளாக வசித்து வருகின்றனர். அரசாங்கத்திடம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் தீர்வுத் திட்டம் இல்லை. தாக்குதல்களை நடாத்தி தமிழ் மக்களை பூண்டோடு அழிக்கும் திட்டமே அரசாங்கத்திடம் உள்ளது எனவும் சம்பந்தன் அச்செவ்வியில் கூறியுள்ளார். (ந-5)

## கிளிநொச்சியில்...

நகர்ப்பகுதி மக்கள் குடியிருப்பான இரத்தினபுரம் மீது நேற்று சனிக்கிழமை பிற்பகல் 12.10 மணியளவில் மிக்-27ரக வானூர்திகள் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன. இத் தாக்குதலில் இரத்தினபுரம் பிள்ளையார் கோவில் உட்பட மற்றும் 13 வீடுகள் சேதமாகியுள்ளன.

தாக்குதலின்போது வீதியில் சென்றுகொண்டிருந்த பொதுமகன் ஒருவரே கொல்லப்பட்டுள்ளார். 7பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர் அடையாளம் காணப்படவில்லை.

இரத்தினபுரத்தைச் சேர்ந்த சதீஸ் அருட்செல்வி (வயது 27) அவரின் மகன் சதீஸ் தனுசிகன், மகள் சதீஸ் தனுசிகா ஆகிய சிறுவர்களும் குழந்தையான காந்தராசா துவாரகன் அவரின் தாயான காந்தராசா பவானி (வயது 36), மாணிக்கப்பிள்ளை மங்களேஸ்வரி (வயது 62) நாச்சிக்குடாவிலிருந்து இடம்பெயர்ந்து வட்டக்கச்சி நோக்கி சென்று கொண்டிருந்த கே.ஜெயந்தி ஆகியோரே படுகாயமடைந்தவர்கள் ஆவர்.

இதேவேளை கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் இனம் காணப்பட்ட இலக்கொன்றின் மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாக விமானப் படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜெனக நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கடற்புலிகளின் மகளிர் பிரிவு முகாமை இலக்கு வைத்தே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். இத் தாக்குதல் நேற்று பகல் 12.15 மணியளவில் நடத்தப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (ந-5)

## ராஜீவ் கொலை...

சுமார் 14 வருடங்கள் சிறைத்தண்டனையை அனுபவித்துவரும் வீ.ரவிச்சந்திரன் என்பவரே இவ்வாறு மனுத்தாக்கல் செய்துள்ளார். தொடர்ச்சியாக 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்து வருவதனால் தம்மை விடுதலை செய்யுமாறு அவர் குறித்த மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஏற்கனவே மற்றொரு குற்றவாளியான நளினி இவ்வாறான வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## கிழக்கு மக்களுக்கு...

களினதும் சமூக பொருளாதார விடயங்கள் தொடர்பாக அரச தலைவர்கள் இந்தச் சந்திப்பின்போது கவனம் செலுத்தியதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பை அடுத்து ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் வைத்து அதன் செயலாளர் பான் கீ மூனையும் ஜனாதிபதி சந்தித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 63-வது பொதுச் சபைக் கூட்டத் தொடரில் ஜனாதிபதி ஆற்றிய உரையின்போது முன்வைத்த யோசனைகளை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் வரவேற்றுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

உணவுப் பிரச்சினை தொடர்பில் இலங்கை அரசாங்கம் எடுக்கும் செயற்றிட்டம் ஏனைய நாடுகளுக்கும் முன்மாதிரியாக உள்ளதாகவும் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

உணவுப் பிரச்சினை தொடர்பில் இலங்கை மேற்கொள்ளும் செயற்றிட்டங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை பூரண ஒத்துழைப்பை வழங்கும் எனவும் செயலாளர் நாயகம் உறுதியளித்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ந-5,3)

## கிளிநொச்சியில் இருந்தும்...

செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

கிளிநொச்சியை விட்டு இடம்பெயர்ந்த பெரும்பாலான மக்கள் கிழக்கே முல்லைத்தீவு வீதியிலுள்ள தர்மபுரம் பகுதியில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

ஜூன் மாதத்திலிருந்து வன்னியின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தொடர்ச்சியாக இடம்பெயர்ந்து வரும் மக்களின் எண்ணிக்கை தற்போது 2 இலட்சத்து 30 ஆயிரத்தை அண்மித்திருப்பதாகத் தெரிவிக்கும் மனித நேய உதவி அமைப்புக்கள், இவர்கள் அனைவருக்கும் இப்போது அவசர உதவிகள் தேவைப்படுவதாகக் குறிப்பிடுகின்றது.

இலங்கை அரசாங்கத்தின் உத்தரவுக்கு அமைய செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதியுடன் ஐ.நா. நிறுவனங்கள் உட்பட அனைத்து உதவி வழங்கும் அமைப்புக்களும் வன்னியிலிருந்து வெளியேறியுள்ள நிலையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மட்டுமே அங்குள்ள இவ்வளவு தொகை மக்களுக்கு வேண்டிய உதவிகளையும் வழங்கி வருகின்றது.

வன்னியிலிருந்து வவுனியாவுக்கு இடம் மாறியுள்ள எந்தவொரு அமைப்பும் இன்னமும் தமது பணிகளை மீண்டும் ஆரம்பிக்காத நிலையில் வன்னிப் பகுதி மக்களுக்கான உதவிகள் ஆபத்தான கட்டத்தை அடைந்துள்ளன.


வன்னியில் தொடர்ந்தும் எமது பணிகளை நாம் முன்னெடுக்க விரும்புகின்றோம் என்று தெரிவித்துள்ள கொழும்பிலுள்ள ஐ.நா. பேச்சாளர் கோர்டன் வெய்ஸ், எவ்வாறு இதனை மேற்கொள்வது என்பது தொடர்பாக அரசாங்கத்துடன் தாம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் கூறியுள்ளார்.

எனினும் எப்போது இந்தப் பணிகள் உரிய முறையில் ஆரம்பிக்கும் என்பது தொடர்பான உத்தரவாதம் எதுவும் இன்னமும் வழங்கப்படவில்லை.

ஜூன் மாதம் முதல் இடம்பெற்று வரும் மோதல்களால் குறைந்தது 14 வைத்தியசாலைகள் வேறு இடங்களுக்கு நகர்த்தப்பட்டுள்ளன. இதனால் சுமார் 200 கட்டில் வசதிகள் இழக்கப்பட்டுள்ளன. 45 சதவீதமான மாணவர்கள் இம்முறை பல்கலைக்கழகத் தேர்வுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவில்லை என்று ஐ.நா. அமைப்புத் தகவல் ஒன்று கூறுகின்றது. (ந-5)

# மரண அறிவித்தல்

## அப்பையா சிறீகரன்



மண்கும்பானை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா சிறீகரன் 25.09.2008 வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் அமரர் அப்பையா மற்றும் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும், அமரர் செல்லத்துரை மற்றும் இராசமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் இராசாத்தி அம்மாவின் அன்புக் கணவரும், பிரதீபா, பிரசாந்தன், பிரதாபன், பிரகீதா ஆகியோரின் அன்புத் தந்தையும், வர்ணகுலசீலனின் அன்பு மாமனாரும், நகுலேஸ்வரன் (நியூ நகுலா ஜூவல்லறி, நியூ லலிதாஸ் ஜூவல்லறி,யாழ்ப்பாணம்), புலேந்திரன் (சுவிஸ்), செல்வராணி, பாஸ்கரன்(ஜேர்மனி), உதயராணி(ஜேர்மனி), தயாபரன் (உதயா ஜூவல்லறி, யாழ்ப்பாணம்), இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரணியா, யனூஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஞானரெட்ணம், றாஜினி(பிரான்ஸ்), சிவராசா, பரமேஸ்வரி, மைதிலி, சிறீமலர்(சுவிஸ்), தேவகுமார், ஜெயந்தி(ஜேர்மனி), அருட்சோதி (ஜேர்மனி), உமாதேவி, நடேசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இல. 65, புதுவீதி அத்தியடி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.65,புதுவீதி,**
**அத்தியடி,**
**யாழ்ப்பாணம்.**

(1773)

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்,**
**சகோதரர்கள்.**

## தமிழர்கள் எல்லோரும்...

வெற்றியின் விளிம்பில் நின்று கொண்டிருக்கின்றன. தரையில் சகல போர் முனைகளிலும் கடல் மற்றும் வான் வழிகளிலும் நாம் மிகுந்த தேர்ச்சியுடன் உள்ளோம். புலிகளை விட ஆளணியிலும் கூட்டுவலுவிலும் ஆயுத பலத்திலும் பார்க்க எமது படைகள் ஆதிக்க வலுவுடையவையாக உள்ளன.

தற்போதைய போரில் எமது படைகள் நிச்சியம் வெற்றியடையும் என்ற பூரண நம்பிக்கை எமக்குள்ளது.

அந்த வெற்றியை விரைவாக நாம் பெற்றுவிடுவோம். தற்போது எமது படைகள் கிளிநொச்சிக்கு மிக அண்மையில் நிற்கின்றன. இங்குள்ள அமைப்புக்கள் இரு தரப்பினது தாக்குதல்களுக்குள் அகப்பட்டு விடக்கூடாது என்ற நோக்குடனேயே அவற்றை வெளியேறக் கோரியுள்ளோம்.

இலங்கையிலுள்ள தமிழர்கள் எல்லோரும் பயங்கரவாதிகள் அல்லர். ஆனால் பயங்கரவாதிகளில் 98 சதவீதமானவர்கள் தமிழர்களாகவே உள்ளனர் என்றார் அவர். (ந-5)

## கிளிநொச்சியை கைப்பற்ற...

கிளிநொச்சி மீது அடுத்த வாரம் தாக்குதல் நடத்தப்படுமென இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

இதற்கு அமைவாக முகமாலை ஏ-9 பாதையூடாகப் படை நடவடிக்கையை முன்னெடுப்பதும் ஆனையிறவைக் கைப்பற்றி தமது முன்னரங்க எல்லையை பலப்படுத்திக் கொண்டு கிளிநொச்சி நோக்கிய படை நடவடிக்கையை தொடர்வதும் இராணுவத்தின் திட்டமிடலாக இருப்பதாகப் பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

முகமாலையூடாக படை நடவடிக்கை முன்னெடுக்கப்படும்போது அதன் தாக்கம் யாழ்ப்பாணத்திலும் எதிரொலிக்கும் எனவும் இதனால் யாழ்ப்பாணத்தின் இயல்புநிலை பாதிக்கப்படுமெனவும் கருத்துக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை முகமாலையூடாக படை நடவடிக்கையை முன்னெடுக்கும்போது படையினரின் ஆயுத விநியோகம் மற்றும் காயப்படும் படையினருக்கான மருத்துவ ஏற்பாடுகளை கருத்திற் கொண்டு வீதித் தடைகளை ஏற்படுத்துவதற்காக யாழ்ப்பாணத்தில் சில நாட்கள் ஊரடங்குச் சட்டம் முழுமையாக அமுலுக்கு வரலாம் என்றும் நம்பப்படுகிறது.

இதேவேளை முகமாலை ஏ-9 பாதையூடாகப் படையினர் நகர்வு நடவடிக்கைய முன்னெடுக்கும்போது பாரிய மோதல் வெடிக்க வாய்ப்பு இருப்பதாகவும் பாதுகாப்பு ஆய்வாளர்களின் கருத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ந-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.